Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 05

புதன்கிழமை
01 டிசெம்பர் 2021

கார்த்திகை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

# மனித உரிமை மீறல்கள் இலங்கையில் மலிந்துவிட்டன

## பிரிட்டன் எம்.பிக்கள் தெரிவிப்பு

லண்டன், டிசெம்பர் 1

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச சட்டங்களுக்கு முரணான குற்றங்கள் தொடர்பில், தற்போது வரை எந்தவொரு நபரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. அங்கு மனித உரிமை மீறல்கள் வழக்கமானவையாக மாறியிருக்கின்ற சூழ்நிலையில், தமிழ் மக்களுக்கான நீதி மற்றும் மனித உரிமைகள் என் பன உறுதிசெய்யப்படும்வரையில் அதற்காகத் தொடர்ந்து போராடத்தயாராக இருக்கின்றோம்– என்று, பிரிட்டன் நாடாளு மன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். 15

---



## 4ஆவது சடலம் ஒதுங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று நேற்று கரையொ 15

## நாயாறில் புரண்டது கடற்படைப்படகு

முல்லைத்தீவு, டிசெ. 1

கரையோர சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபடும், முல்லைத்தீவு நாயாறு கடற்படை முகா 10

## வலையில் சிக்கிய கைக்குண்டு

யாழ்ப்பாணம், டிசெ. 1

பலாலி, மயிலிட்டி பகுதியில் மீன் வலையில் சிக்கிய நிலையில், கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக தெரி 10

## இலங்கையை காப்பாற்றியது சீனாவே

கொழும்பு, டிசெ. 1

மேற்குலக கடன் பொறியிலிருந்து இலங்கையை சீனா காப்பாற்றியது என்று, கொழும்பில் உள்ள 10

கோட்டாபய ராஜபக்ஷ
8h

யாழ்ப்பாண குடாநாடு மற்றும் காவிரிப் படுக்கை கடற்பரப்பில் - வணிக எண்ணெய் வள இருப்பைக் கண்டுபிடிக்கக் கூடிய அதிக வாய்ப்பு காணப்படுவதனை வலுச்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது

#கோட்டாபயராஜபக்ஷ

## யாழ்ப்பாணத்திலும் எண்ணெய் வளம்

### வலுசக்தி அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணத்திலும், வணிக எண்ணெய் வளம் உள்ளது. அதனைக் 10

## தொற்று 722 சாவு 18

கொழும்பு, டிசெ. 1

இலங்கையில் நேற்று 722 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம்காணப் பட்டுள்ளனர் என்று 11

---

மாதகலில் நேற்றும் காணி அளவீடு முறியடிப்பு

## போராட்டம் நிறைவடைந்த பின்னர் வீடு புகுந்து மக்களுக்கு அச்சுறுத்தல்

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 1

மாதகல், குசுமாந்துறை பகுதியில் நேற்று காணி அளவிடுவதற்கு எதிரான போராட்டம் நிறைவடைந்து அனைவரும் சென்றபின்னர், மாலை வேளையில், பொலிஸாரின் அறிவுறுத்தலையும் மீறி ஒருவருடைய வீட்டுக்குச் சென்ற கடற் படையினர் காணி தொடர்பில் விசா 15

## பொறுப்புக்கூறல் இன்மையால்தான் இராணுவம் தொடர்ந்தும் அடாவடி!

### கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

போர்க்குற்றத்துக்கான பொறுப்புக்கூறல் இல்லாமையால் வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரின் அத்துமீறல்கள் தொடர்ந்தும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன் 15

## நேற்றும் யாழில் சிலிண்டர் வெடிப்பு

### விசாரணை அறிக்கை இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெரு பகுதியிலுள்ள வீடு ஒன்றில் நேற்று சிலிண்டர் ரெகுலேட்டர் வெடித் துத் தீப்பற்றி எரிந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. நேற்றுஅதிகாலை 5 15




" சண்டைக்குப் போறதை விடவும் இப்ப சமையலுக்குப் போறதுதான் உயிர்போற விசயமாப் போட்டுது பாருங்கோ..."

வவுனியாவில்

## 29 பேருக்கு 'எய்ட்ஸ்' இளவயதினரே அதிகம்

### மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

வவுனியா, டிசெ. 1

வவுனியாவில் கடந்த 18 வருடங்களில் 29பேர் எய்ட்ஸ் நோயாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர். இளவயதினரே இவ்வாறு அதிகமா 15



## முதன்முறையாக செங்கோலுடன் யாழ்.மாநகர அமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ். மாநகர சபையின் அமர்வு, வரலாற்றில் முதற்றடவையாக நேற்று செங்கோலுடன் நடைபெற்றது. அண்மையில் சிவபதமடைந்த நல்லூர் 10

வல்வெட்டித்துறை நகர சபையில்

## இரண்டாவது தடவையும் தோற்கடிக்கப்பட்டது பாதீடு

### தவிசாளர் செல்வேந்திரா பதவியிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

வல்வெட்டித்துறை நகரசபையின் பாதீடு இரண்டாவது தடவையாகவும் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது. 10

## நாட்டில் மீண்டும் ஒரு தாக்குதல் நடக்கும்!

### கூறுகின்றார் கமால் குணரட்ன

கொழும்பு, டிசெ. 1

மீண்டும் ஒரு தாக்குதல் இடம்பெறக்கூடிய சாத்தியம் உண்டு என்று தெரிவித்திருக்கின்றார், தேசிய 10

## இதுதானா இலங்கையின் நல்லிணக்கம்?

### கனடாவின் ப்ரம்ப்ரன் நகர மேயர் 'ருவிற்'

கொழும்பு, டிசெ. 1

இலங்கை அரசாங்கம் ஏற்கனவே பாதிப் படைந்திருக்கும் அதன் நற்பெயருக்கு மேலும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது. தம்மால் இழைக்கப் 15

### மாதகல் கிழக்குப் பகுதியில்

# கடற்படைக்கு காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தடுத்துநிறுத்தம்!



**யாழ்ப்பாணம், டிசெ. 1**

**வலி. தென்மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாதகல் கிழக்கு ஜே/150 கிராம அலுவலர் பிரிவில் ‘அக்போ’ கடற்படைக்காக பொதுமக்களின் காணிகளை அளவிடும் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்படவிருந்த நிலையில், பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து அவை தடுத்து நிறுத்தப்பட்டன.**

நில அளவைத் திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளுக்காக வருவதற்கு முன்னர், கடற்படையினர் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் பொதுமக்களும், தமிழ்த் தேசியப் பற்றாளர்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றுகூடி கடற்படைக்கும் நில அளவைத் திணைக்களத்தினருக்கும் தம் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். அத்துடன், நில அளவைத் திணைக்களத்தினரின் அளவீட்டுப் பணிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டனர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு வருகைதந்த இளவாலை குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மாலிக ஆராச்சி, பொதுமக்களுடனும் அரசியல்வாதிகளுடனும் கலந்துரையாடி குறித்த பிரச்சினைக்கு எதிர்வரும் 2ஆம் திகதி கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தித் தீர்வு காணப்படும் என்றும் அதுவரை அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் உறுதியளித்தார். இதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

இந்தப் போராட்டத்தின் போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வலி. தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான ஜிப்ரிக்கோ, அனுசன், ரமணன், சிவனேஸ்வரி, ராஜினி, அச்சுதபாயன் மற்றும் வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான கலையமுதன், சஜீவன் ஆகியோரும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் கலந்துகொண்டனர்.

(ம-125-319)



## பெண்களை படம்பிடித்து மிரட்டியது கடற்படை!

யாழ்ப்பாணம், டிசெ. 1

மாதகல் ஜே/150 கிராம அலுவலர் பிரிவில் உள்ள காணியொன்றை கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிக்கும் முயற்சி நேற்று பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில், எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பெண்களை கடற்படையினர் ஒளிப்படம் எடுத்து மிரட்டினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், கடற்படையினருடன் நின்ற புலனாய்வாளரும் கைகாட்டி அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதியில் கடற்படையினருக்கான காணி சுவீகரிப்பைத் த்டுக்கும் முயற்சியில் ஈடுபடுபவர்கள் மீது இவ்வாறான அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக விடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-27-319)



## காணி சுவீகரிப்பதற்காக வீடுபுகுந்து கையொப்பம்

*கடற்படைக்கு எதிராக பாதிக்கப்பட்டவர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், டிசெ. 1

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதகல் கிழக்கு ஜே/152 கிராம அலுவலர் பிரிவில், காணியைச் சுவீகரிப்பதற்காக கடற்படையினர் காணி உரிமையாளரின் வீட்டுக்கு இரவு வேளையில் சென்று கையொப்பம் பெற்றுச்சென்றுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதுதொடர்பில் காணி உரிமையாளரின் மகன் தெரிவிக்கையில்:

எமது காணியை தம்மிடம் ஒப்படைக்குமாறு கடற்படையினர் கடந்த 6 வருடங்களாகக் கோரி வருகின்றனர். எமது காணியை வழங்க மறுத்து வருகின்றோம். இப்போதுபோன்று எப்போதும் நாம் எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். இது தொடர்பில் பல இடங்களுக்குச் சென்று பல்வேறு முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளோம். எனினும் எந்தப் பயனும் இல்லை - என்றார்.

காணி அளவீட்டுப் பணிகளை எதிர்ப்பதற்காக அந்த இடத்துக்கு வருகை தந்த, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் கேட்ட போது; குறித்த அச்சுறுத்தலுக்கு எதிராக பதிவுத்தபால் மூலம் முறைப்பாடு செய்ய முடியும் அல்லது சட்டத்தரணி மூலம் முறைப்பாடு பதிவு செய்யலாம். பொலிஸார் முறைப்பாடுகளை எடுக்காவிடின், குறித்த காணி உரிமையாளர்கள் என்னிடம் வாருங்கள். நான் அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவுசெய்து கடற்படையின் அச்சுறுத்தலுக்கு எதிராக முறையான நடவடிக்கை ஒன்றை எடுக்க முடியும் - என்றார்.

(ம-125-319)

## வீழ்ச்சியடைகிறது ரூபாவின் பெறுமதி

கொழும்பு, டிசெ.1

2021ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் கடந்த 15ஆம் திகதி வரையான காலத்தில் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி 7.7 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் இலங்கையின் ரூபா பெறுமதி இழந்துள்ளது.

ஸ்ட்ரேலிங் பவுணுக்கு நிகராக 6.3 வீதமாகவும், அவுஸ்திரேலிய டொலருக்கு நிகராக 3.1 வீதமாகவும், இந்திய ரூபாவுக்கு நிகராக 6.3 வீதமாகவும், யூரோவுக்கு நிகராக 0.9 வீதமாகவும் இலங்கையின் ரூபா பெறுமதி இழந்துள்ளது.

அதேநேரம், ஜப்பான் யென்னுக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி 1.9 வீதமாக வலுவடைந்துள்ளது. (எ-இ)



## தடிகளுடன் கடற்படை

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் - மாதகல்பகுதியில் கடற்படைக்குக் காணி சுவீகரிக்கும் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது பொதுமக்களை அச்சுறுத்தும்வகையில் கடற்படையினர் தடிகள் மற்றும் பொல்லுகளுடன் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் அச்சுறுத்தல்களையும்மீறி பொதுமக்களும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களும் ஒன்றுகூடி, தமது எதிர்ப்பைக் கடற்படைக்கும், நில அளவைத் திணைக்களத்தினருக்கும் எதிராகப் பதிவுசெய்தனர். அவ்வாறு திரண்ட பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் கடற்படையினர் ஒளிப்படங்களை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-20-319)

# பொருள்கள் விலை உயர்வை தடுப்பது இயலாத காரியம்!

### கைவிரித்தார் நிதியமைச்சர் பஸில்

கொழும்பு, டிசெ.1

பொருள்களின் விலை அதிகரிப்பைத் தடுக்க முடியாது. பண்டங்களுக்கான தட்டுப்பாடு மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வரிசையில் காத்திருந்தல் போன்ற சந்தர்ப்பங்கள் ஏற்படாத வண்ணம் செயற்பட வேண்டும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தக் கருத்துப் பரிமாறல்கள் நடந்துள்ளன என்று தெரியவருகின்றது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தற்போது நாட்டின் பல பாகங்களிலும் பதிவாகும் எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு செறிமானத்துக்கு இணையாகவே பல நாடுகளில் சமையல் எரிவாயுக் கொள்கலன்கள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் - அந்த நாடுகளில் இவ்வாறான சம்பவங்கள் ஏற்படவில்லை என்றும் - அமைச்சர் ஒருவர் கூட்டத்தில் சுட்டிக்காட்டியதுடன், செறிமானத்தில் சிக்கல்கள் இல்லை என்பது இதன் மூலம் புலப்படு கின்றது -என்றும் கூறியுள்ளார்.

(எ-இ)

# பண்டிகைக் காலத்தில் நாடு முடக்கப்படாது!

## அரசு அறிவிப்பு



**கொழும்பு, நவ. 30**

**நத்தார் பண்டிகைக் காலத்தில் நாட்டை முடக்குவதற்கு அரசு தீர்மானம் எடுக்கவில்லை. எனினும், "ஒமிக்ரோன்" பிறழ்வானது உலகுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. மக்கள் பொறுப்புடனும், சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றியும், நடந்துகொள்ளவேண்டும். இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக் களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பண்டிகைக் காலத்தில் நாடு முடக்கப்படலாம் என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டை மூடுவதற்கு நாம் எதிர்ப்பார்க்கவில்லை. தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் நாம் இன்னும் பூரண பாதுகாப்பைப் பெறவில்லை. அனைவரினது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை இதுவிடயத்தில் திருப்தி கொள்ள முடியாது.

எனவே, பண்டிகைக் காலத்தில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சுகாதார வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் முறையாகப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மீண்டும் நெருக்கடி நிலைமை உருவாகும்.

"ஒமிக்ரோன்" என்ற பிறழ்வானது உலகுக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. சில நாடுகள் எல்லைகளை மூடியுள்ளன. எனவே, இதுவரை தடுப்பூசிகளைப் பெறாதவர்கள் அதனைப் கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-44)

## செட்டியூர்குளம் உடைப்பெடுப்பு

வவுனியா,டிசெ.1

ஓமந்தை கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட செட்டியூர்குளம் நேற்று முன்தினம் மாலை உடைப்பெடுத்துள்ளது.

மழை காரணமாக நீர் வரத்து அதிகரித்தமையால் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத இந்தக் குளம் உடைப்பெடுத்துள்ளது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனால் சுமார் 50 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் கமக்காரர் அமைப்பின் நிதியில் இருந்து உடைப்பெடுத்த பகுதியைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் குளத்தில் வேறு பகுதிகளிலும் உடைப்பெடுக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. (ஒ-4-110)

## பண்டிகைக் காலத்தில் கட்டுப்பாடு அவசியம்!

### தவறினால் ஜனவரியில் காத்திருக்கிறது ஆபத்து, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்து



கொழும்பு, டிசெ.1

பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த சில வாரங்களாகக் காணப்படும் பொதுமக்களின் நடத்தை காரணமாகப் பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதைத் தவிர்க்க முடியாது உள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

பண்டிகைக் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தத் தவறினால், ஜனவரி மாதம் கடும் ஆபத்தான நிலைமை ஏற்படும். பொதுமக்களின் நடத்தை காரணமாக கொரோனாத் தொற்றுத் தீவிரம் அடையும். அதனால் பயணக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது அவசியம் - என்றார்.

அதேவேளை, நாட்டில் மீண்டும் முடக்கம் நடைமுறைப்படுத்துவதைத் தடுக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## மியன்மாரிலிருந்து அரிசி இறக்குமதி

கொழும்பு, டிசெ. 1

மியன்மாரில் இருந்து 20 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பான கொள்ளளவைப் பேணுவதற்காக ஒரு இலட்சம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்ய கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

அதற்கமைய அரசிடம் இருந்து அரசிடம் என்ற அடிப்படையில் இலங்கை அரசு மற்றும் மியன்மார் அரசுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் படி 20 ஆயிரம் மெற்றிக் தொன் அரசியை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒரு மெற்றிக்தொன் அரிசி 460 டொலர் என்ற அடிப்படையில் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தின் மூலம் அரிசி இறக்குமதி செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)




எங்கட ஆக்களுக்கு தூரத்திலயே நெருப்பு பத்தினது தெரிஞ்சாலும்கூட பேசாமல் இருந்திட்டு, தங்கட தலைமாட்டுக்க அது வந்தபிறகுதான் ஆத்துப்பதைச்சு அந்தரப்பட்டு திரிவினம். அப்பிடித்தான் எங்கட டிப்பார்ட்மெண்டுகளும் ஒவ்வொரு வருசக் கடைசியிலயும் அல்லோலகல்லோலப்படுகிறது வழமை. ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டுக்கும் ஒவ்வொரு வேலைத் திட்டங்களுக்கெண்டு ஒதுக்கின தொகையளை முதல்ல அளவாச் சிலவழிச்சிருப்பினம். ஆனால் வருசம் முடியிற கட்டத்தில ஒதுக்கப்பட்ட நிதி எக்கச்சக்கமா மிஞ்சி இருக்கும். ஆனால் வேலைத்திட்டங்களோ கையில இருக்காது. அதால அருணாச்சலம் பட ரஜினி மாதிரி, எப்பிடி இந்தக் காசைக் கரைக்கலாம் எண்டிட்டு, நவம்பர் - டிசம்பர் மாதங்களில ஒரே செமினார், வேர்க் ஷொப் எண்டு போட்டு, அந்தக் காசைக் கரைச்சபிறகுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுவினம். ஒருவேளை காசு மிஞ்சினால் அதை அப்பிடியே திருப்பி அரசாங்கத்துக்கு அனுப்ப வேண்டியிருக்கும். அப்பிடி அனுப்பினால் ஆயிரத்தெட்டு கேள்விக்கு பதிலும் சொல்லவேனும். "இந்தக்காசு ஒதுக்கின திட்டத்துக்கு என்ன நடந்தது?எப்பிடி காசு மிஞ்சினது? அப்போ திட்டத்தை விட மேலதிகமா காசு தேவையெண்டு மிகைக்கணக்கு காட்டினீங்களோ?" எண்டெல்லாம் கேள்வியளைக் கேக்கிறதைவிட , அங்கேயே செலவழிச்சு முடிக்கிறது உத்தமம் எண்டு, என்னென்ன செமினார் எல்லாம் செய்யமுடியுமோ அவ்வளவையும் டிப்பார்ட்மெண்ட்காரர் செய்வினம்.

ஆனால் இதில விதிவிலக்காவும் சிலர் இருக்கினம். குறிப்பாச் சொல்லவேனும் எண்டால் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சையும், வடமாகாணக் கல்வித்திணைக்களத்தையும் சொல்லலாம். இவையும் வருசக்கடைசியில தங்களுக்கு வந்த நிதி திரும்பிப் போகக் கூடாதெண்டு கடைசி மாதங்களில ஓடுப்பட்டுத் திரியினம்தான். ஆனால் அப்பிடி கையில இருக்கிற நிதியை தேவையில்லாமல் கரியாக்காமல் , பிரியோசனமான வேலைக்கு பாவிக்கினம். அப்பிடி என்ன பிரியோசனமான வேலையெண்டு உங்களுக்கு டவுட் வரலாம்? எங்கட மூத்த எழுத்தாளர்களின்ர படைப்புகளையெல்லாம் தேடிப்பிடிச்சு எடுத்து அதைத் தொகுப்பா வெளியிடுகினம். அந்தத் தொகுப்பை இலவசமாயும் குடுக்கின்ம். இந்த ஒரு மாசத்துக்கையே நாலைஞ்சு புத்தகம் வெளியிட்டிருக்கினம். அதைவிட இன்னும் சில புத்தகங்கள் தொகுத்துக்கொண்டிருக்கினம் எண்டும் கேள்வி. இப்பிடி அங்க ஒண்டு, இஞ்ச ஒண்டு சிதறிக்கிடக்கிற படைப்புகளை ஒரே புத்தகமாக்கி எங்கட படைப்பாளியளின்ர உழைப்பை பின்னுக்கு வரப்போற சந்ததியும் அறியிறமாதிரி காலங்கடந்தும் நிண்டு பிடிக்கிற இந்தவேலையை எவ்வளவு பாராட்டினாலும் பத்தாது. அப்பிடியொரு திறமான வேலை.

ஆனாலும் சின்னதா ஒண்டு, ரண்டு குறையளும் இருக்கு. சில படைப்பாளிகளின்ர தொகுப்பில, சரியா மினக்கெடாமல் கைக்கெட்டினதுகளை வைச்சுக் கொண்டு முடிச்சிருக்கினம் எண்டு சிலர் பொருமுகினம். அதோட, இப்பிடி புத்தகங்களை வெளியிடேக்க அங்க ஒரே குடும்பத்தில இருந்து 10 பேர் போனாலும், ஆளுக்கு ஒரு புத்தகம் எண்ட கணக்கில ஒரே வீட்டிலையே 10 புத்தகம் போயிடும். பிறகு ஆரும் அந்தப் புத்தகங்களை வாங்க , அமைச்சின்ர அலுவலகத்துக்கு போனால் அங்க புத்தகம் முடிஞ்சிருக்கும். அதால இப்பிடி புத்தகங்களை வெளியீடு செய்யிற நிகழ்வுகளிலையும், ஒரு குடும்பத்துக்கு ஒரு புத்தகம் போறதை உறுதி செய்தால் இன்னும் நல்லம் பாருங்கோ...!



- பட்சி

## சிலிண்டர்கள் வெடிப்பதன் பின்னணியில் சதியா?

### ரஞ்ஜித் மத்தும பண்டார சந்தேகம்

கொழும்பு, டிசெ. 1
சிலிண்டர்கள் வெடிப்பதன் பின்னணியில் பல்வேறு சதித்திட்டங்கள் உள்ளனவா? என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சி உறுப்பினர் ரஞ்ஜித் மத்தும பண்டார.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எரிவாயு சிலிண்டர்களை வீட்டில் வைத்திருக்க அச்சப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்போதுள்ள சிலிண்டரின் கலவையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதால் வெடிப்பு ஏற்படும் சாத்தியம் இருப்பதாக நிபுணர்கள் தெரிவித்து வருகின்றனர்.

குறுகிய தினங்களில் இந்தளவு சிலிண்டர்கள் வெடித்தது தொடர்பில் நாங்கள் இதற்கு முன்னர் கேள்விப்பட்டதில்லை. அதேபோன்று எரிவாயு சிலிண்டர் வெடிப்பதிலும் சதித்திட்டம் இருக்கவேண்டும். ஏனெனில் ஆட்சியாளரின் புதல்வர் ஒருவரின் பெயரில் இந்தியாவில் இருந்து சிலிண்டர்களைக் கொண்டுவர திட்டமிடப்படுகின்றது என்று தெரியவருகின்றது - என்றார். (ம)

# இந்திய மீனவர்களின் வருகையால் கடற்றொழில் அழியும் அபாயத்தில்

### யாழ். இந்தியத் துணைத்தூதுவருக்கு எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம்,டிசெ.1**
**இந்திய மீனவர்களின் வருகையால் யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் அழியும் அபாயத்தில் உள்ளது. மீனவப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மீனவர்கள் கூலித் தொழிலுக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.**

இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர், யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவரை, நேரில் சந்தித்து எடுத்துரைத்தனர்.

சந்திப்புத் தொடர்பில் சம்மேளனத் தலைவர் அன்னராசா தெரிவிக்கையில்; நீண்ட காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகைக்கு எதிராக பல போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும், தற்போதும் இந்திய மீனவர்களின் வருகை பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களில் அதிகரித்துள்ளன.

இதனால் நாங்கள் பல கோடி ரூபா சொத்துக்களை இழந்துள்ளோம். கடற்றொழில் அமைச்சு 500 கோடி ரூபாவுக்கு மேல் இந்திய அரசிடம் நஷ்ட ஈடு கோரியுள்ளது. இருந்தபோதிலும் யாழ். மாவட்ட மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசங்கள், சம்மேளனங்களைப் பொறுத்தவரை அண்ணளவாக 400 மில்லியன் ரூபாவை எங்களுடைய கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்குமாறு, அதற்குரிய திட்டத்தைத் தயாரித்து கடந்த வாரம் கடற்றொழில் அமைச்சிடம்



கையளித்திருக்கின்றோம். அதனைத் தொடர்ந்து இந்திய துணைத் தூதுவரிடமும் கையளித்துள்ளோம். எங்களுடைய மீனவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க இந்த 400 மில்லியன் ரூபா உதவியை தொழிலாளர்களுக்கு மானியமாக, சுழற்சி முறையில் வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம். அந்தக் கோரிக்கையை தாம் பரிசீலிப்பதாக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் தெரிவித்திருந்தார். -என்றார். (ஒ-4- 27)



## நீதியை மட்டும் தாருங்கள் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.1
சர்வதேசமே எமக்கு நீதியை மட்டும் பெற்றுத் தாருங்கள் என்ற கோரிக்கையுடன், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரகத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ் வேண்டாம், இழப்பீடு வேண்டாம், காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் வேண்டாம், சர்வதேசமே நீதியைத் தா போன்ற பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் விடுத்தனர்.

ஒவ்வொரு மாதமும் 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-4-20)

### எரிவாயு சிலிண்டர் வெடிப்பு:

## விசாரணை ஒருங்கிணைப்பு பொலிஸ் அதிகாரி நியமனம்

கொழும்பு, டிசெ.1
சமையல் எரிவாயுக் கசிவு, தீ அல்லது வெடிப்பு போன்றவற்றால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பான விசாரணைகளின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன இந்த அறிவுறுத்தலை மாகாணங்களுக்குப் பொறுப்பான அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள், பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் தலைமையகப் பொறுப்பதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளார்.

ஏதேனும் ஒரு பகுதியில் எரிவாயு விபத்து ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட பகுதியின் பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட எரிவாயு நிறுவனத்துக்கும், சம்பந்தப்பட்ட பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கும் அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தச் சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைக்கு உதவுவதற்காக லிற்றோ மற்றும் லாவ்ப் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். (எ-இ)



## எமக்கு நீதி கிடைக்கும்வரை போராட்டத்தை நிறுத்தோம்

### வவுனியாவிலும் உறவுகள் போராட்டம்

வவுனியா,டிசெ.1
எமக்கான நீதி கிடைக்கும் வரை தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்போம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால், வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கையில்,

“எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியை இலங்கையின் அரசுகள் வழங்கவில்லை. எனவே நாம் சர்வதேச நீதியைக் கோரியே போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். எனவே சர்வதேசம் எமக்கான நீதியை வழங்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம்.

அதேவேளை முல்லைத்தீவில் ஊடகவியலாளரை இராணுவத்தினர் தாக்கியமை அநீதியான செயற்பாடு. மக்களின் பாதுகாப்புக்காகவே இராணுவம் நிலைகொண்டுள்ளதாகக் கூறி தமிழ் மக்களைப் பாதிக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றனர். -என்றனர். (ஒ-4-110)

## கிளிநொச்சியிலும் நேற்று ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,டிசெ.1
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால், கிளிநொச்சியிலும் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மாத இறுதியிலும் மாவட்டங்களிடையே குறித்த போராட்டம் இடம்பெறுவது வழமை. அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் கிளை அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர். (ஒ-4-113)

# வெள்ளத்தைக் கடந்து உடைமாற்றும் அவலம்

யாழ்ப்பாணம்,டிசெ.1

**பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இடுப்பளவு வெள்ளத்தில் உடைகள் ஏதுமின்றி கடந்து, ஏ9 வீதியோரத்தில் உடையணிந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டிய அவலத்தை எதிர்கொண்டுள்ளனர்.**



தென்மராட்சி பிரதேச செயலகத்துக் குட்பட்ட கொடிகாமம் ஜே.327 கிராம அலுவலர் பிரிவுக் கிராமம் தொடரும் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

பல வருடங்களாக எமது பிரச்சினைகளைத் தெரியப்படுத்தியும் எந்த அரசியல்வாதிகளும் , அரச அதிகாரிகளும் கண்டு கொள்வதாக இல்லை. எமக்கு அரிசி, மா,சீனி, அங்கர் தாருங்கள் என்று கேட்கவில்லை. எமது பிரதான போக்குவரத்து வீதியை செப்பனிட்டுத் தாருங்கள். சரியான நீர் வடிகாலமைப்பைச் செய்து தாருங்கள் என்றே கோருகின்றோம்.

வடமாகாண ஆளுநர் நேரடியாக வந்து எமது நிலைமைகளைப் பார்வையிட வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4)



## பாடசாலையை மூடி வெள்ளம்; மாணவர்களின் வரவு மந்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.1

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய வளாகம் வெள்ளக்காடாகியுள்ளது. இதனால் பாடசாலைக்கு மாணவர் வரவு குறைந்துள்ளது.

பாடசாலைக்குச் செல்லும் பிரதான வீதியான விடத்தற்பளை வீதியில் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கச்சாய் கிளாலி வீதியில் பாடசாலைக்கு அண்மையிலுள்ள பாலம் புனரமைக்கப்படுகின்றது. இதனால் மழை நேரங்களில் ஆசிரியர்கள், மாணவர்களின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை வளாகத்துக்குள் ஒன்றரையடிக்கு மேலான வெள்ளம் தேக்கமடைந்துள்ளதால், வெள்ளத்தை வெளியேற்றவும், போக்குவரத்து வீதிகளை தரமான முறையில் செப்பனிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)



## வீதிகளை மூடி வெள்ளம் போக்குவரத்து முடக்கம்

தொடர் மழை காரணமாக இராமாவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கோவிலாமனை சிவன் கோவில் வீதியில், இரண்டு இடங்களில் முழங்கால் அளவுக்கு வெள்ளம் தேக்கமடைந்துள்ளது.

இதனால் முச்சக்கரவண்டி மற்றும் அவசர அம்புலன்ஸ் சேவையைக் கூடப் பெற முடியாத நிலைமைக்கு போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. கட்டைபறித்தான் பிள்ளையார் ஆலயக்குளம் சரியான திட்டமிடல் மூலம் புனரமைக்கப்பட வேண்டும். கோவிலாமனை சிவன் கோவில் வீதி ஐரோட் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. விரைவில் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்து 3 வருடங்கள் முடிவுற்ற போதும் இற்றைவரை ஐரோட் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே வெள்ளம் தேங்கி நிற்கும் காலத்தில் ஐரோட் திட்டத்தினர் வருகை தந்து வீதிகளின் நிலைமைகளைப் பார்வையிட்டு உரிய திட்டமிடல் மூலம் புனரமைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-159)

## மாணவர்கள் வெள்ளத்தால் பாதிப்பு: கல்வி அதிகாரிகள் நேரில் ஆராய்வு

வெள்ளப்பாதிப்பை எதிர்கொண்டுள்ள கொடிகாமம் கோவிலாமனைப் பகுதிக்கு கல்வி அதிகாரிகள் நேற்று நேரில் சென்று ஆராய்ந்தனர்.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் தென்மராட்சிப் பிரதேச செயலர், பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அங்கு சென்றிருந்தனர்.

கோவிலாமனைப் பகுதியில் போக்குவரத்துப் பாதை மூடி அமைக்கப்பட்டதன் காரணத்தால், மாணவர்கள் குளத்தினூடாக பயணிக்க வேண்டியுள்ளது.

இங்கு மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அதிகாரிகள் நேரில் ஆராய்ந்தனர். (ஒ-4-9)

## பாடசாலை செல்ல மாணவர்கள் ஆர்வம்

கிளிநொச்சி, டிசெ.1

மழைக்கு மத்தியிலும் மாணவர்கள் பாடசாலைகளுக்கு உற்சாகமாக வருகை தருகின்றனர் என்று கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் நீண்ட நாள்கள் பாடசாலைகள் செயற்படவில்லை. தற்போது மீள பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மாணவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதேவேளை மாவட்டத்தின் இரு கல்வி வலயங்களின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் குளங்களின் வான் வெள்ளத்தைக் கடந்து பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டி உள்ளது.

மாவட்டத்தில் உள்ள தற்காலிக கொட்டகைகள், தகரக் கூடாரங்களில் கல்வி பயிலும் மாணவர்கள் குளிரான சூழலலை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-13)

## வெள்ளத்தை வெளியேற்ற அவசர கலந்துரையாடல்

சாவகச்சேரி,டிசெ.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் தேக்கமடைந்துள்ள வெள்ளத்தை வெளியேற்றுவது தொடர்பான அவசரக் கலந்துரையாடல் நேற்று தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச இடர்கால முகாமைத்துவ அலகினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில், சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி.சுதோகுமார் மற்றும் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம மட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீடுகள், காணிகள், ஒழுங்கைகள் வீதிகள் போன்ற இடங்களில் முழங்காலுக்கு மேல் வெள்ளம் தேங்கியுள்ளதால், வீட்டில் பயன்படுத்தும் உடைகளுடன் செல்வோர் வெள்ளம் இல்லாத பாதுகாப்பான இடங்களில் உடைகளை மாற்றிச் செல்ல வேண்டியுள்ளது.

குறிப்பாக சில பாடசாலை வளாகங்களைச் சுற்றி வெள்ளம் காணப்படுவதால், மாணவர்கள், பாடசாலை வகுப்பறைகளுக்குச் சென்றே சீருடைகளை மாற்றுகின்றனர்.

வெள்ளம் அதிகம் காணப்படுவதால் சில பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

இதனால் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களின். எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. (ஒ-4-9)

## அறுபது வருடங்களாக கவனிக்கப்படாத வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.1



கொடிகாமம் கச்சாய் வீதியில் ஆரம்பிக்கும் மருதடிப்பிள்ளையார் வீதி, 60 வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

கச்சாய் வடக்கு, கொடிகாமம் தெற்கு கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் வெள்ளாம் போக்கட்டி, அல்லாரை வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளினூடு எல்லை வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது.

கச்சாய் வீதியில் ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து சுமார் 200 மீற்றரும், மருதடிப்பிள்ளையார் கோவிலின் பின் வீதியில் இருந்து சுமார் 220 மீற்றர் தூரமும் 2019 ஆம் ஆண்டு கம்பரெலிய திட்டத்தில் புனரமைக்கப்பட்டது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையே உள்ள சுமார் 250 மீற்றர் வரையான வெள்ளாம்போக்கட்டி கொடிகாமம் தெற்கு ஊர் எல்லை வீதி புனரமைக்கப்படவில்லை. சுமார் 250 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த வீதியை தினசரி பயன்படுத்துகின்றனர்.

எனவே குறித்த வீதியைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-159)

# மனிதாபிமான செயற்பாட்டாலே பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி

## மஹிந்த பெருமிதம்



**கொழும்பு, டிசெ. 1**

**மனிதாபிமான செயற்பாட்டின்மூலம் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளிவைத்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்தினோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய விமான ஓடுதளம் மற்றும் ஓடுபாதையைத் திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

2014ஆம் ஆண்டில் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அபிவிருத்தித் திட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு முதலீட்டாளர்களுடனும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் 2015 ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு, இந்தத் திட்டத்தை திட்டமிட்டபடி முன்னெடுத்துச் செல்லவில்லை. எமது அரசு ஆட்சிக்கு வந்து 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இன்று விமான நிலையத்தில் 48 விமானங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக ஆண்டுக்கு 6 மில்லியன் பயணிகளைக் கையாளும் திறன், 2023ஆம் ஆண்டளவில் 15 மில்லியன்வரை அதிகரிக்கும்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் உங்களுக்கு நினைவிருக்கும். அந்த அவசர நிலையின் போது இலங்கைக்கு வந்த விமானங்களை மாற்றி அனுப்புவதற்கு வேறு விமான நிலையமொன்று எமக்கு இருக்கவில்லை. அப்போதே மற்றுமொரு விமான நிலையத்தின் தேவை எம்மால் உணரப்பட்டது. அதற்கமைய நாம் மத்தள விமான நிலையத்தை நிர்மாணித்தோம்.

2015ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த நல்லாட்சிஅரசு, மத்தள விமான நிலையத்தை பொருளாதார அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கு மாறாக, ராஜபக்சக்களை பழிவாங்கும் நோக்கில் நெல்லைக் களஞ்சியப்படுத்தியது.

அவ்வாறான வங்குரோத்து நிலைக்குத்தள்ளப்பட்ட நல்லாட்சி அரசு முடிந்தளவு கடன்களைப் பெற்றுக் கொண்டது. ஆனால், செய்தவேலை ஒன்றும் இல்லை. நல்லாட்சி அரசுக்கு எந்தவொரு அபிவிருத்தித் திட்டமோ, அபிவிருத்தி இலக்கோ காணப்படவில்லை.

ஆனால், நாம் மனிதாபிமான செயற்பாட்டின் மூலம் பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளிவைத்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்தினோம். அதன் பின்னர், எமது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை உயர்வடைந்தது.

கொரோனாத் தொற்று நிலைமையை அடுத்து, மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட்டமையால் கடந்த காலங்களில் விமான நிலையங்களை மூடினோம்.

மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சுற்றுலாத்துறையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதற்கு சுற்றுலாத்துறை அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டார்.

எமது அரசு ஆட்சிக்கு வந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிட்டுச் செயற்பட்டது. வாக்குறுதிகளை வழங்குவது போன்றே ஆட்சிக்கு வந்தவுடன் அதனை நிறைவேற்றியும் காட்டுகின்றோம்.

நாம் முன்னெடுக்கும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களின் மூலமும் எமது எதிர்காலச் சந்ததியினரே நன்மையடைவர் என்பதை நினைவுபடுத்த வேண்டும் - என்றார். (ஒ-4)



## உலர் உணவுப் பொதிகள் வழங்கல்

முல்லைத்தீவு, டிசெ. 1

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனின் அலுவலகத்தில், கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமையும் , 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன.

மூங்கிலாறு கிராமத்தில் 25 குடும்பங்களுக்கும் தேவிபுரம் கிராமத்தில் 50 குடும்பங்களுக்கும் இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த உணவுப் பொதிகளை நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் கதிர்வேல் செவ்வேள் வழங்கினார். (ஒ-ரி1-19)



## செம்மண்மோட்டை குளம் உடைப்பு

கிளிநொச்சி,டிசெ.1

பூநகரி கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட செம்மண்மோட்டை குளம் உடைப்பெடுத்துள்ளதை அடுத்து, பிரதேச மக்கள், இராணுவத்தினர் மற்றும் கமநல சேவை நிலையத்தினர் இணைந்து மண்மூடைகளை அடுக்கி, உடைப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த குளத்தின் மூலம் எந்தவிதமான பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளாதபோதும், கிராம மக்களின் நீர்த்தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது.

வறட்சியான காலங்களில் மக்கள் குளிப்பதற்காகவும், கால்நடைகள் நீர் அருந்துவதற்குமான பயனுள்ள குளமாக இது காணப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு குறித்த குளம் புனரமைக்கப்பட்டாலும் முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை. இனியாவது குளத்தை ஆழமாக்கி, புனரமைக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-113)

## விளைபயிர்களை அழிக்கும் கட்டாக்காலி கால்நடைகள்

மன்னார், டிசெ.1

மாந்தைமேற்கு, விடத்தல்தீவு கிராமத்தில் அமைந்துள்ள நட்டாம்பிட்டி விவசாய நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ள விளை பயிர்களை கட்டாக்காலி கால்நடைகள் சேதப்படுத்தி வருகின்றன.

இது தொடர்பில் உரிய அதிகாரிக்கு தகவல் வழங்கியபோதும், தற்போது வரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நட்டாம்பிட்டி விவசாய நிலப்பரப்பில் விடத்தல்தீவு கிராம விவசாயிகள் காலகாலமாக பெரும்போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த விவசாயிகள் ஒவ்வொரு வருடமும் கால்நடைகளால் பல இலட்சம் ரூபா பெறுமதியான சேதங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற னர். இந்தவருடம் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச் செய்கையும், பெருமளவான கட்டாக்காலிகளால் அழிக்கப்பட்டுள்ளதால், அங்கு விவசாய நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன -என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஒ-4-56)

## தொழிற்சங்கப் போராட்டத்தால் நாடு இருளில் மூழ்கும் அபாயம்!

எதிர்காலத்தில் நாடுமுழுவதும் மின்சாரம் தடைப்படும் அபாயம் உள்ளது என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் எச்சரித்துள்ளது. இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் 6 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. இந்தப் போராட்டத்தால் மின்சாரப் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு அரசும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுமேபொறுப்புஎன்று-இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்துள்ளார்.

தங்கள் கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் தொடர்ச்சியாகத் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## கடனைச் செலுத்துவதில் மோசமான நிலையில் நாடு

### ஜனாதிபதி தெரிவிப்பு

வெளிநாட்டில் பணிபுரியும் பல இலங்கையர்கள் தங்கள் வேலைகளை இழந்துள்ள நிலையில், அவர்கள் அனுப்பும் பணத்தின்மூலம் பெறப்படும் அந்நியச் செலாவணியையும் இழந்துள்ளோம். இதனால், நாடு இன்று கடனைத் திருப்பிச் செலுத்துவதில் மோசமான நிலைமைக்கு முகங்கொடுத்து வருகின்றது. இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்; இலங்கை, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 4 பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளதோடு, முறையே ஒரு பில்லியன் டொலர் மற்றும் 1.5 பில்லியன் டொலரை பிணைமுறி நிதிகளாக வழங்க வேண்டியுள்ளது.

கடந்த பல தசாப்தங்களில், சலுகை நிதிகள் மற்றும் வணிகக் கடன்களுக்கிடையிலான வீதம் பெரியளவில் அதிகரித்துள்ளதோடு, 2022ஆம் ஆண்டில் வட்டிச் செலவில்மட்டும் கிட்டத்தட்ட 1.3 பில்லியன் டொலரை நாம் செலுத்தவேண்டும்.

வேகமாக அதிகரித்துவரும் எரிசக்திச் செலவுகள் மற்றும் சரக்கு போக்குவரத்துச் செலவுகள், உலகம் முழுவதும் உயர் விலைகள் மற்றும் பற்றாக்குறைகளை ஏற்படுத்தக் காரணமாய் உள்ளன. 2030ஆம் ஆண்டளவில் இலங்கை தனது சக்திவலு தேவையில் 70 சதவீதத்தை, புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யவேண்டும் என்று தெளிவான இலக்கை நிர்ணயித்துள்ளது.

அனைத்துத் தரப்பினர்களின் ஒருங்கிணைந்த முயற்சியின் மூலம் இந்த இலக்கை முன்னதாகவே அடைய முடியும் - என்றார். (இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## லூயிக்கள் சூழ்நிலை!

மக்கள் இங்கே புல்லைத் தின்கின்றார்கள். அனுதினம் வறுமையாலும் அவல ஆட்சியாலும் வதைபட்டுச் செத்துக்கொண்டிருக்கும் நோயாளிக்கும் பிச்சைக்காரருக்கும் மன்னராயிருப்பவரை 'மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி' என எவ்வாறழைப்பது? இது பிரான்ஸின் கொடுங்கோலனான 15ஆம் லூயி தொடர்பில் அக்காலக் கவிஞனொருவனின் விளிப்பு!.

15ஆம் லூயியின் மகனான 16ஆம் லூயியின் ஆட்சிபற்றிக் கேட்கவேவேண்டாம். வரிகளாலும் தண்டங்களாலும் சூழப்பட்ட கொடுங்கோன்மை மிக்கது அவனின் ஆட்சி. 'இரு கழுதைகளை அவன் ஓட்டிச் சென்றான். ஒரு கழுதையின் முதுகில் ஓட்ஸ் தானியங்கள். இன்னொரு கழுதையின் முதுகில் உப்பு வரிச் சீட்டுகள்' என்று 16ஆம் லூயியின் கொடுங்கோன்மை பற்றிக் கட்டியம் செய்தார் அக்கால கத்தோலிக்க மதகுரு.

அன்று பிரான்ஸ்போன்று இன்று இலங்கையும் இரு லூயிக்களின் பிடியில் சிக்கிச் சின்னாபின்னமாகின்றது – செய்வதறியாது திகைக்கின்றது. ஒருவர் மஹிந்த, இன்னொருவர் கோத்தாபய.

விடுதலைப்புலிகள் ஆயுத அளவில் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னரான மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் சீனாவின் 'கடனாதிக்கம்' இலங்கையில் அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது. இந்த நாடு முதலாளிகளுக்கும், சீனத்தின் செல்வாக்குக்கும் ஏற்றதாக மாறி நடைபோட்டது. குருவியின் தலையில் வைத்த பனங்காயாக தகுதிக்கும் திராணிக்கும் மீறிய கடன்சுமைகள் நாட்டை நெருடிக் கொண்டிருந்தன. இந்தப் பின்னணியில்தான் 2015ஆம் ஆண்டு மஹிந்த தரப்பினர் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போதிலும், ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் ஏற்படுத்தப்பட்ட தேசியப் பாதுகாப்பு என்ற பிம்பம் மீண்டும் அவர்களை ஆட்சியில் அமர வைத்தது. ஆனால் இன்றோ, தாம் செய்தது வரலாற்றுத் தவறு என்பதை இலங்கை வாழ் மக்கள் அனைவரும் உணர்ந்துள்ளனர்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அனுதினம் அதிகரித்துச் செல்கின்றன. நீண்ட பரிசீலனைகள் – ஆலோசனைகளின் பின்னர் அதிகரிக்கப்பட்ட விலைகள் இப்போதெல்லாம் திடீர் திடீர் என்று அதிகரிக்கப்படுகின்றன. வாரம் ஒரு விலையில் அத்தியாவசியப் பொருள்கள் விற்கப்படுகின்றன. இதற்கு ஆகப்பிந்திய எடுத்துக்காட்டாக பாண் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் பணவீக்கம் எல்லைமீறிப் போய்க்கொண்டிருக்கின்றது. சீனத்தின் கடன்கள் இலங்கைத் தீவின் கழுத்தை நெரித்துக்கொண்டிருக்கின்றன.

இங்கே கோத்தாபய தரப்புக்குக் கோடிட்டுக் காட்டவேண்டிய விடயம் என்னவென்றால், லூயிக்களின் கொடுங்கோன்மை முடிவுக்கு வந்ததும் பாண் விலை அதிகரித்தமையால்தான். 'பாணின் விலை அதிகரித்தால் கேக் உண்ணுங்கள்' என்ற ஒற்றைக்கூற்றுத்தான் அந்தப்பெரிய பிரான்ஸியப் புரட்சிக்கே வித்திட்டது. எல்லாம் நன்மைக்கே!




# மன்னார் எரிவாயு ஆய்வை இந்தியாவிடம் கொடுங்கள்

### இப்படிக்கோருகிறார் சீன நட்புறவுக் கழகத்தின் உப தலைவரான செல்வம் எம்.பி.



**மன்னார், டிசெ.1**

**மன்னார் கடற்பரப்பில் உள்ள இயற்கை எரிவாயு மற்றும் எரிபொருள் வளத்தைக் கண்டறிவதற்கான ஆய்வுப்பணிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

சீனாவுக்கு இந்த வாய்ப்பை வழங்குமிடத்து, அரசு அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியேற்படும் என்று - அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தின், எரிசக்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (எ-இ)

# உளவுத் தகவல்களை கவனிப்பது பொலிஸ்மா அதிபரின் பொறுப்பு

### *சி.டி.விக்கிரமரத்ன நீதிமன்றில் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.1

தேசிய பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் பொலிஸ்மா அதிபர், தேசிய பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் இருந்தால், முன்கூட்டியே உளவுத்துறைத் தகவல்களை அல்லது முன்னறிவிப்புக்களை உன்னிப்பாகக் கவனித்துத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

இவ்வாறு பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினார் என்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்ற விசாரணை மன்றத்தில் சாட்சியமளிக்கும்போதே விக்கிரமரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ்மா அதிபர் சாதாரண அரசு ஊழியர் போன்றவர் அல்ல. அவர் தேசிய பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினராக உள்ளார். அவர் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பானவர்.

அரச உளவுத்துறை எந்த ஒரு தகவலையும் பொலிஸ்மா அதிபருக்கு முழுமையான உளவுத் தகவலாக வழங்க வேண்டியதில்லை. புலனாய்வுப்பிரிவினர் வழங்கும் எந்தத் தகவலையும் பொலிஸ்மா அதிபர் மேம்படுத்தி, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார்.

சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதை அடுத்து, இந்த வழக்கை விசாரணை மன்றம் ஜனவரி மாதம் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (எ-இ)

# மன்னாரில் டெங்கு அதிகரிக்கக் கூடும்

### *மக்களுக்கு அபாய எச்சரிக்கை*

தற்போது நிலவும் கால நிலையில் மன்னாரில் அதிக இடங்களில் வெள்ளம் தேக்கமடைந்துள்ளதால், டெங்குத் தொற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே மக்கள் எச்சரிக்கையாக தங்களை நுளம்பு தீண்டா வண்ணம் காப்பாற்றிக் கொள்ள **வேண்டும் என்று மன்னார்** பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதுவரை மன்னாரில் நவம்பர் மாதத்தில் 8 பேர் டெங்குத் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். **மேலும் பலர் சமூகத்தில்** தொற்றுக்கு உள்ளாகி மென் குணங்குறிகளுடன் குணமடைந்தும் இருக்கலாம்.

டெங்குத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் பேசாலை 8 ஆம் வட்டாரம், பணங்கட்டிக்கொட்டு, எமில் நகர் மற்றும் சின்னக்கடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் - என்றார். (ஒ-4-60)

## குருதித்தானம்

யாழ்ப்பாணம்,டிசெ.1

இளவாலை வருத்தப் படாத வாலிபர் சங்கத்தின் 18 ஆவது குருதித் தான முகாம் எதிர் வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இளவாலை கலைமகள் படிப்பகத்தில் (நாவலடிச் சந்தி அருகாமை) இடம்பெறவுள்ளது.

தற்போது குருதி வங்கிகளில் ஏற்பட்டிருக்கும் குருதி வகைகளுக்கான தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு, இந்த முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ளவர்கள் குருதிக்கொடை வழங்க முடியும் - என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4)



# மதுபானச்சாலை அமைக்க எதிர்ப்பு

## மக்கள் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,டிசெ.1

**கிளிநொச்சி - பெரியபரந்தன் பிரதேசத்தில் புதிய மதுபானச்சாலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரதேச மக்கள் நேற்று மீண்டும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

பெரிய பரந்தன் பிரதேசத்தில் புதிதாக மதுபானச்சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கடந்த காலத்தில் பெரிய பரந்தன் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உரிய அதிகாரிகளுக்கு எழுத்துமூலம் ஆட்சேபனைகளை அனுப்பிய தோடு, பல தடவைகள் பொதுமக்கள் ஒன்று சேர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் மேற்கொண்டுள்ளனர்.

புதிய மதுபானச்சாலை அமையவுள்ள இடத்துக்கு அருகில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மற்றும் விஞ்ஞானக் கல்வி நிலையம் உள்ளிட்ட கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பெரியபரந்தன் கிராமத்தில் பெரும்பாலான குடும்பங்கள் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளன.

நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் பனை, தென்னைவள தொழிலாளர்களாக உள்ளனர். இதனால் அவர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும்.

எனவே குறித்த மதுபானசாலை விடயத்தில் பிரதேச மக்களின் ஒட்டுமொத்த உணர்வுகளையும் கருத்திற் கொண்டு, புதிய மதுபானச்சாலை அமைப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச செயலகத்தின் முன்வாசலில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், கரைச்சி பிரதேச உப செயலாளரிடம் மனு கையளிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "போதையற்ற சமுதாயத்தை உருவாக்க புதிய மதுபானச் சாலையை தடை செய்", மதுபானச் சாலைக்கு அனுமதி வழங்காதே, பெரியபரந்தன் கிராமத்தில் புதிய மதுபான சாலைக்கு அனுமதிக் காதே போன்ற பதாகைகளைத் தாங்கியிருந்தனர். (ஒ-4-214-113-6)

## 3 வயது குழந்தை விபத்தில் சாவு!

கொழும்பு - குருநாகல் வீதியில் பொத்துஹெரவில் நடந்த விபத்தில் மூன்று வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது.

பாரவூர்தி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியே இந்த விபத்து நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பெண் ஒருவருடன்பயணித்த குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## சாவிலும் இணைந்த வயோதிபத் தம்பதி

சாவகச்சேரி,டிசெ.1

வாழ்வில் ஒன்றிணைந்த தம்பதி, சாவிலும் ஒன்றிணைந்த மனதை உருக்கும்சம்பவம், சரசாலை வடக்கில் இடம்பெற்றுள்ளது.

மனைவியின் பிரிவைத் தாங்க முடியாத ஏக்கத்தில் சில மணிநேரத்தில் கணவனும் உயிரிழந்துள்ளார். தம்பதியினரின் சடலங்கள் ஒன்றாகத் தகனம் செய்யப்பட்டன.

அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு முருகேசர் (வயது -93) அவரது மனைவியான முருகேசர் தங்கம்மா (வயது - 93) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஒ-4)

## உணவுப் பொதிகள் வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ.1

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில், மழையால் பாதிக்கப்பட்ட சங்க அங்கத்தவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உணவுப் பொதிகள், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சங்கத் தலைமை காரியாலய மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ஒ-ரி1-63)



## மர நடுகை

முல்லைத்தீவு, டிசெ.1

முல்லைத்தீவு - அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் மர நடுகை செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அமரர் சிறீஸ்கந்தவேல் குகதர்சனின் 100 ஆவது நாள் நினைவையொட்டி, லண்டனில் வசிக்கும் இராமநாதன் அருள்மொழிராமனின் நிதிப்பங்களிப்பில் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த மரக்கன்றுகள், பாடசாலை வளாகத்தில் நடுகை செய்யப்பட்டதுடன் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன. (ஒ-ரி1-9)

## 17 வயதுச் சிறுமி திடீரென இறப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.1

17 வயதுச் சிறுமி ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி -நவிண்டில் நாச்சிமார்கோவிலடிப் பகுதியில் நடந்துள்ளது.

கோடீஸ்வரன் வினுசியா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

அவரது உடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணை கடை யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4-27)

# எவரும் குடியமராத வீடுகளை வீடற்றவர்களுக்கு வழங்குங்கள்

முல்லைத்தீவு,டிசெ.1

முல்லைத்தீவு, பனிக்கன்குளத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளில், சமூகவிரோதச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அத்துடன் சில வீடுகளில் எவரும் குடியமராது பாவனையற்றுக் காணப்படுகின்றன.

இத்தகைய வீடுகளை, வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பனிக்கன் குளம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர், பனிக்கன்குளம் கிராமத்தில் 50 வீடுகள் அமைக்கப்பட்டன. இந்த வீடுகளில் அரச உத்தியோகத்தர்கள் குடியமரவில்லை. வீடுகளில் பாம்புப் புற்றுகள் வளர்ந்தும், பற்றைகள் மூடியும் காணப்படுகின்றன.



இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் பல தடவைகள் ஆராயப்பட்ட போதிலும், இறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் பல குடும்பங்கள் வீடு களற்றவர்களாக உள்ளன. ஆள்களற்ற அரச உத்தியோகத்தர் வீட்டுத் திட்டத்தில் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் சமூகச் சீர்கேடான விடயங்கள் இடம்பெற்று வருகின்றன.

எனவே முல்லைத்தீவு மாவட்டச் செயலர் குடியிருப்புக்களை நேரடியாகப் பார்வையிட்டு, காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-13)

# கொழும்பிலிருந்து ரயில் மூலமாக காங்கேசன்துறைக்கு எரிபொருள்

## அனுப்புமாறு சார்ள்ஸ் எம்.பி. கோரிக்கை

**கொழும்பு, டிசெ. 1**

**கொழும்பிலிருந்து நேரடியாக ரயில்மூலம் காங்கேசன்துறைக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கோரிக்கை விடுத்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், எரிபொருள் விலை அதிகரிப்பு மக்களுக்கு பெரும் சுமையாக அமைந்திருப்பதாகவும் கூறினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது கொழும்பிலிருந்து வடக்குக்கான எரிபொருள்கள் பவுஸர்கள் மூலமே காங்கேசன்துறையிலுள்ள எரிபொருள் விநியோக சாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் வீண் செலவுகளும் கால தாமதங்களும் ஏற்படுகின்றன. எனவே, கொழும்பிலிருந்து நேரடியாக ரயில் மூலம் காங்கேசன்துறைக்கு எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் செலவுகள் குறைவதுடன் காலதாமதமும் தவிர்க்கப்படும்.

அதேவேளை, அரசு அமைச்சுக்கு ஏதாவது நிவாரணங்களை வழங்கி, எரிபொருள் விலையை அதிகரிக்காதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, காற்றாலை மின் நிலையம் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது பிரதமர் அநுராதபுரம், வவுனியா, மன்னார் ,முல்லைத்தீவு ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென வாக்குறுதியளித்திருந்தார்.

எனினும், வுவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை எந்தவொரு நியமனமும் வழங்கப்படவில்லை. இது தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும்

இங்கு பல குடியேற்றக் கிராமங்கள் உள்ளன. இவ்வாறான கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். -என்றார். (கு-22)

---

## சிறுமியைத் துஷ்பிரயோகிக்க முயன்றவருக்கு வாள்வெட்டு!

கிளிநொச்சி,டிசெ.1

வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் மகளுடன் முறைகேடாக நடந்துகொள்ள முயற்சித்த நண்பன்மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

வீட்டில் உறவினர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் 12 வயது மதிக்கத்தக்க மகளிடம் தந்தையின் நண்பன் தவறாக நடக்க முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து அவரது காது அறுக்கப்பட்டது. கை மற்றும் கால் போன்ற இடங்களில் பலமாக வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தருமபுரம், கிளிநொச்சி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வாள் ஒன்றும் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்தனர். (ஒ-4-113)

---

### அரச தரப்பின்

## திஸ்ஸ குட்டியாராச்சி எம்.பி. காட்டுமிராண்டி நடத்தை

### மனோ கணேசன் கண்டனம்

கொழும்பு, டிசெ. 1

பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கண்டிக்க இன, மத, மொழி, அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபடுவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில்,

இலங்கை சனத்தொகையில் 52 வீதத்துக்கு அதிகமானோர் பெண்கள் ஆவர். ஆகவே பெரும்பான்மையினரான பெண்களை அவமானப்படுத்திவிட்டு, இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

சக நாடாளுமன்ற உறுப்பினர் ரோகினி குமாரி விஜேரத்னவுக்கு எதிராக பெண்ணின வெறுப்பு மற்றும் அருவருக்கத்தக்க கருத்துகளை பகிரங்கமாக சபையில் பிரயோகித்துள்ளார், அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி. தகாத வார்த்தைப்பிரயோகங்களை நாட்டின் அதியுயர் நாடாளுமன்ற சபையில் கூறும்போது, நிலைமை வரம்பு மீறுகிறது. அதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. - என்று குறிப்பிட்டுள்ளார். (த)

---

## ஊர்காவற்றுறை பாதைப்படகில் பயணிகளுக்கு உயிர்காப்பு அங்கிகள்

ஊர்காவற்றுறை பாதைப்படகு சேவையில் பயணிப்போருக்கு உயிர்காப்பு அங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. திருமலை குறிஞ்சாக்கேணியில் அண்மையில் பாதைப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்தனர். பாதுகாப்பற்ற பாதைப்படகால் இந்த விபத்து நடந்துள்ளது. இதன் எதிரொலியாக ஊர்காவற்றுறை பாதைப்படகுச் சேவையை பாதுகாப்பான முறையில் மேற்கொள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ-4)

---


## பாடசாலை மாணவர்கள் வீடு திரும்ப பஸ் இல்லை

### ஆளுநரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பாடசாலையில் இருந்து வீடு திரும்புவதற்கு, பேருந்துச் சேவையை மேற்கொள்வதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். மாந்தைகிழக்கு பனங்காமம் சந்தியில் இருந்து பயணிக்கும் தனியார் பேருந்து மாணவர்களை காலையில் ஏற்றிச் செல்லும். ஆனால் பாடசாலை முடிந்தவுடன் மாணவர்கள் வீடு திரும்புவதற்கான பேருந்துச் சேவைகள் இடம் பெறுவதில்லை.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர், மாந்தை கிழக்கு பிரதேச செயலர், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துச் சங்கத் தலைவர் ஆகியோரிடமும் ஏற்கனவே முறையிட்டுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-4-13)

---



## காணிப்பயன்பாடு திட்டமிடல் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிப்பயன்பாட்டு திட்டமிடல் தொடர்பான கூட்டம், மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மாவட்டச் செயலர் க.விமலநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காணி தொடர்பான விவரங்கள் பிரதேச ரீதியாக ஆராயப்பட்டன.

நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளுக்கான அனுமதி பெறல், திணைக்களங்களுக்கான காணி கையளிப்பு, தனிநபருக்கான மேட்டுநிலக் காணி மற்றும் வயல் காணிகளுக்கான அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கலந்துரையாடலில் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்தில் இளம் தொழில் முனைவோரை தெரிவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நேர்முகத் தேர்வுகளின் விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

கலந்துரையாடலில் மேலதிக செயலர் மாகாண காணி ஆணையாளர், மாவட்ட செயலக காணிப்பயன்பாட்டு திட்டமிட பிரிவின் உதவிப் பணிப்பாளர், சிரே நில அளவை ஆணையாளர், பிர செயலர்கள், வனஜீவராசிகள் திணை உத்தியோகத்தர்கள், மாவட்டச் செய மற்றும் பிரதேச செயலகங்களின் கா யன்பாட்டு திட்டமிட [illegible] மற்றும் கா பிரிவு உத்தி[illegible]தர்கள் ஆகி கலந்து கொண[illegible]

---

## சிவபூமி மனவிருத்தி பாடசாலை கௌரவிப்பு



யாழ்ப்பாணம்,டிசெ.1

தேசிய மட்டத்தில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கோண்டாவில் சிவபூமி மனவிருத்தி பாடசாலை கௌரவிக்கப்பட்டது.

நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், சிவபூமி பாடசாலை அதிபர் கலைவாணி குகதாஸன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், நல்லூர் பிரதேச செயலா, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலா கலந்து கொண்டனர். (ஒ-4-20, 27)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் .

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும், மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**கும்பம்:** இன்று வழக்கமான செயல்களிலும் பொறுமை அவசியம். யாரோடும் தேவையில்லாமல் விவாதம் செய்ய வேண்டாம். இறைவழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். உறவினர்கள் வகையில் செலவுகளும் வருத்தமும் ஏற்படலாம்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

*இரண்டாவது...*

சபையின் அமர்வு தவிசாளர் என். செல்வேந்திரா தலைமையில் நேற்று நடைபெற்றது. கடந்த 17ஆம் திகதி சபையில் முன்வைக்கப்பட்ட பாதீடு தோற்கடிக்கப்பட்ட நிலையில், திருத்தங்களுடன் பாதீடு சபையில் நேற்று முன்வைக்கப்பட்டது. எனினும், இரண்டாவது தடவையாகவும் அது தோற்கடிக்கப்பட்டது.

வாக்களிப்பின்போது முன்னரைப் போன்றே பாதீட்டுக்கு எதிராக ஒன்பது வாக்குகளும் ஆதரவாக எட்டு வாக்குகளும் கிடைத்தன. இதனால் ஒரு வாக்கால் பாதீடு மீண்டும் தோல்வி அடைந்தது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி புதிய தவிசாளர் தெரிவின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் க.சதீஸ், சுயேச்சைக் குழு சார்பில் என்.செல்வேந்திரா ஆகியோர் போட்டியிட்டனர்.

பாதீடு தோற்கடிக்கப்பட்டுள்ளதால், தவிசாளர் பதவியை செல்வேந்திரா இழந்துள்ளார். (த-இ)

*நாட்டில்...*

பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளரும் பயங்கரவாதம் தொடர்பான சர்வதேச ஆய்வாளருமான பேராசிரியர் ரொஹான் குணரத்ன.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புத்துறையின் அனைத்துப் பிரிவுகளுக்கும் ஆளுமையுள்ளவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சிறந்த முறையில் இயங்குவார்களேயானால், தாக்குதல் இடம்பெறுவதை தடுக்கக் கூடியதாக இருக்கும்.

அதனைத்தவிர, முஸ்லிம்களுடன் அரசாங்கமும் சிங்கள மக்களும் அன்போடு இருக்க வேண்டும். முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களைத் தூற்றி இந்தவிடயத்தை கட்டுப்படுத்த முடியாது. முஸ்லிம்களில் அதிகமானோர் அடிப்படைவாதத்தைப் பின்பற்றினாலும் அவர்களில் சிறு எண்ணிக்கையிலானோரே வன்முறையில் ஈடுபடுகின்றனர் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-இ)

*முதன்முறையாக...*

கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10ஆவது நிர்வாக அதிகாரி குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியாரின் நினைவாக நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம், யாழ். மாநகர சபைக்கு செங்கோல் ஒன்றை வழங்கியிருந்தது.

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 11ஆவது நிர்வாக அதிகாரி குமரேஷ் சயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் வடிவமைப்பில் குறித்த செங்கோல் உருவாக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், வரலாற்றில் முதற்றடவையாக செங்கோலுடன், நேற்றைய மாநகர அமர்வு, மாநகர முதல்வர் தலைமையில் நடைபெற்றது. (த-இ)

*நாயாறில்...*

முக்குச் சொந்தமான படகு ஒன்று கரையோரப் பகுதியில் நேற்று விபத்துக்குள்ளாகி மூழ்கியுள்ளது.

நாயாறுப் பகுதியில் அதிகளவான வெள்ளம் பெருங்கடலுடன் கலப்பதால் நீரோட்டம் அதிகரித்துள்ள, களப்பு பகுதியில் குறித்த படகு மூழ்கியுள்ளது. அதில் சென்ற சிப்பாய்கள் நீந்தி கரைசேர்ந்துள்ளனர். குறித்த படகை மீட்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)

*வலையில்...*

விக்கப்பட்டது.

தொழிலாளர் ஒருவர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவேளை அவருடைய வலையில் அது சிக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் பலாலி பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. பொலிஸார் அதை மீட்டுச்சென்றனர். (த-125)

*இலங்கையை...*

சீனத் தூதரகம் தனது 'ருவிற்றர்' பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை இதுவரை பெற்றுக்கொண்டுள்ள சர்வதேச கடன்களில் சீனாவிடம் 10 வீதமான கடனையே பெற்றுள்ளது. அது 3 ஆயிரத்து 388.2 மில்லியன் டொலர் என இலங்கை மத்திய வங்கியை மேற்கோள்காட்டி சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம், அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்குவிட தயாராகிய நேரத்தில் சீனா உதவுவதற்காக முன்வந்து, இலங்கையை கடன் பொறியில் இருந்து காப்பாற்றியது.

சர்வதேச பிணை முறிப் பத்திரங்களுக்கு செலுத்த டொலர் இல்லாத காரணத்தாலேயே இலங்கை 2017 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கியது. இதனை விடுத்து, சீனாவின் எக்சிம் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்காக இலங்கை அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கவில்லை என்று சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

*யாழ்ப்பாணத்திலும்...*

கண்டுபிடிக்கக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன என்று, வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது பற்றிய தகவலை, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக"

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை இராஜரட்ணம்

யாழ் கொக்குவிலை பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, சென்னை வளசரவாக்கம், நல்லூர் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராஜரட்ணம் அவர்கள் கடந்த (27.11.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அமிர்தம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான அகிலேசப்பிள்ளை தனலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரியின் (மலர்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற வரதராஜாவின் அன்புச் சகோதரனும், இராஜபவன், பவானி, சத்தியவாணி, இராஜசேகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரன், சூரியகாந்தன், நிர்மலா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கலாநிதி, சண்முகநாதன் மற்றும் விமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனுஷான், நிதூஷான், சரண்ஜன், கர்சிகா, கிருஜன், ஜஸ்வந், கிருத்திகா, ரித்திக், ரோகித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2021) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல 862/5, K.K.S. Road இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வ.றஞ்சன் - 077 6712906
பவன் - 076 9969 658

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 722) 1-6

## JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING – 2022 NOTICE OF MEETING

Notice is hereby given that the Annual General Meeting (AGM) of the Jaffna Medical Association, will be held on Saturday, 29th January 2022 at 11.00 a.m. at the Nurses Training School Lecture Hall Teaching Hospital Jaffna, for the following purposes:

1. To receive and consider the annual report of the committee of management on the affairs of the association, the statement of accounts for the year ended on 31st of December 2021 and the report of the auditors thereon.
2. To consider any resolutions proposed by members and committee where due notice has been given.
3. To elect the committee of management for year 2022.
4. To appoint the auditors of the association and to authorize the committee of management to determine their remuneration.

By order of the committee of management

Honorary Secretary
1st December 2021

(cs.41325) (2.6)



## கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)

பழைய மாணவர் சங்க விசேட பொதுக்கூட்டம்

காலம்: 12.12.2021
நேரம்: பி.ப 2.30 மணி
இடம் : கல்லூரியின் கேட்போர் கூடம்

நிகழ்ச்சி நிரல்

1. அமைதி வணக்கம்
2. வரவேற்புரை
3. தலைமையுரை
4. கடந்த பொதுக்கூட்ட அறிக்கை
5. பொருளாளர் அறிக்கை
6. சபையோர் கருத்துரை
7. நூற்றாண்டு நோக்கிய தெளிவுபடுத்தல்
8. ஏனைய விடயங்கள்
9. நன்றியுரை

"இந்த நானிலத்தில் நல்லதொரு பிரசையாக எம்மை உருவாக்கிய கல்லூரித்தாயின் எதிர்கால பயணத்தில் நாமும் பங்காளராவோம்."

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்

(CR 36105 )1-6



## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம், ஏழாலை.

வட்டாரம் -19, சுன்னாகம் புத்தூர் வீதி,
ஆதன இலக்கம் 68/70E , புன்னாலைக்கட்டுவன் தெற்கு

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் எனும் முகவரியில், வட்டாரம் -19, சுன்னாகம் புத்தூர் வீதியில் ஆதன இலக்கம் 68/70E உடைய ஆதனமானது எமது ஆதனவரிப் பதிவேட்டில் முன்பு பதியப்படவில்லை

வடக்கு மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தெற்குப்பகுதி, வலிகாமம் தெற்கு - செயலகப்பிரிவு, J/209 கிராமசேவகர் பிரிவு, மல்லாகம் கோவிற்பற்று, ஈவினை இறை,"மத்தாளோடைகடட் டீயும் இலச்சாவுடையும், நிலப்பரப்பு ஐந்தும் (நில. பர 05 )இதில் கிழக்கு பக்கமாக சீதனம் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பு 2 1/2 நீக்கி நிலப்பரப்பு 2 1/2 (இரண்டரை). இதற்கு எல்லைகள் கிழக்கு சீவரத்தினம் பெண் சுசிலாதேவியின் ஆதனம் வடக்கு றோட்டு. மேற்கு வன்னித்தம்பி பெண் இரத்தினத்தின் ஆதனம். தெற்கு கதிரன் பசுபதிக்கும் பெண் பரமேஸ்வரிக்கும் உரிய ஆதனம். இதடங்கலும் தெற்கெல்லைக் காணியில் இருக்கும்கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இவ்வெல்லைப்படி இதன் கிழக்கெல்லையருகால் வடக்கு றோட்டுக்கு போக்குவரத்து செய்ய மூன்றடி அகல பாதை பாவிப்புரித்து புற நீங்கலாக 499ம் இலக்க. 2021.02.11 ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு சி. ஜோதிலிங்கம் எழுதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தர்மராசா மயூரி என்பவருக்கு வந்தடைந்துள்ளது. உத்தரவு பெற்ற நில அளவையாளர் T. தங்கராஜா அவர்களின் 2018.05.30 ம் திகதிய 10109 ம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு-01 எனக் குறிப்பிடப்பட்ட இவ்வாதனமானது நிலப்பரப்பு 02 குழி 2.29 அளவுடையதாக காணப்படுகின்றது. இவ்வாதனத்தினை பிரதேசசபை ஆதனவரிப் பதிவேடுகளில் தர்மராசா மயூரி என்பவரின் பெயரில் பெயர் மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனமானது புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கதிரன் பசுபதியும் பெண் பரமேஸ்வரியும் என்பவர்களால் தர்மராசா பெண் சுமதி என்பவருக்கு 34966 ம் இலக்க 1986.09.01 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் பூதப்பிள்ளை இளையதம்பி எழுதிய சீதன உறுதியின்படி காலம் சென்ற எனது தாயார் பசுபதி தர்மராசா பெண் சுமதியின் சொந்தமும் ஆட்சியுமானது. 2019ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி எனது தாயார் பசுபதி தர்மராசா பெண் சுமதி மரணமடைந்துள்ளார் அவரது மரணத்தின் பின் ஏற்கனவே பெற்றோரின் சொத்துக்களை பெறாத வாரிசு என்ற வகையில் நானே இவ்வாதனத்தை ஆட்சி செய்து வருகின்றேன் என்று 499ம் இலக்க. 2021.02.11ம் திகதிய பிரசித்த நொத்தாரிசு சி. ஜோதிலிங்கம் எழுதிய வெளிப்படுத்தல் உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வுறுதியின் தாயுறுதியாகிய 31628ம் இலக்க 1980.04.03ம் திகதி பிரசித்த நொத்தாரிசு திரு. பூதப்பிள்ளை இளையதம்பி எழுதிய சீதன உறுதியில் இவ்வாதனம் இந்த நொத்தாரிசின் முன் 29836ம் இலக்க 19.05.1977ம் திகதிய தவணை அறுதி உறுதிப்படி உரியதென்றும் இது என்னால் எவ்விதமாயும் பாரித்து அல்லது பராதீனப்பட்டிருக்கவில்லை என்றும் வெளிப்படுத்துகின்றேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் குறித்த 29836ம் இலக்க 1977.05.19ம் திகதிய பூ. இளையதம்பி எழுதிய உறுதி இவ்வாதன உறுதிக்குரிய தோம்பு. அதற்கு முற்பட்ட பதிவுக்கான தோம்புகள் என்பன தொலைந்துவிட்டதால் உறுதிப்படுத்திய சான்றிதழ்களை வழங்க முடியாதுள்ளது என யாழ்ப்பாண மாவட்ட காணிப்பதிவேட்டினால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறித்த ஆதனத்தினை தற்போதைய உரிமையாளர் தர்மராசா மயூரி எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் தகுந்த ஆதாரங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது தர்மராசா மயூரி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை எந்தவகையிலும் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(cs.41361) (2.6)



## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 • 02 • 1940



உதிர்வு 01 • 12 • 2011

அமரர் சிவசம்பு செல்வராசா (மாம்பழம்)

எங்கள் குலவிளக்கு அணைந்து பத்து ஆண்டுகள்
ஆனபோதும் உங்களை மறக்க முடியாது அப்பா!
எங்கள் உயிர் இருக்கும்வரை உங்கள்
நினைவு இருக்கும்

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.
021 205 2435

கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(2.6)


## சட்டபூர்வமாகிறது கஞ்சா ஏற்றுமதி

கொழும்பு, டிசெ. 1

கஞ்சா ஏற்றுமதியை விரைவில் சட்டப்பூர்வமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுதேச மருத்துவத்துறை இராஜாங்க அமைச்சர், சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி தெரிவித்தார்.

நேற்றைய சபை அமர்வின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் மாதத்துக்குள் கஞ்சா ஏற்றுமதிக்கு அனுமதி வழங்குவதற்கான சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன்.

மருத்துவத் தேவையை அடிப்படையாகக்கொண்டு கஞ்சா ஏற்றுமதியை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(கு-இ)


## University of Jaffna – Sri Lanka Faculty of Graduate Studies

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)**

**Part time course - 2021/2023 (Batch III)**

Applications are entertained from eligible candidates for the above course.

**Admission Requirements:**

1. A Degree from any recognized University
   And
2. At least three years experience in Teaching English as a Second Language (ESL)in Government or recognized private schools/Institutions (documentary support should be annexed)
3. A Credit pass in English at G.C.E O/L Examination

**Course Fee** : Rs. 155, 000.00 (5000/- Refundable fee)
**Medium** : English
**Duration** : Three Semesters (One and a half year)
**Selection** : An aptitude Exam and Interview
**Application form**: 1000/-
**Closing date for Application**: 31.12.2021

The course fee can be paid in full or in three installments.

**Payment schedule:**

**At registration, beginning of first semester - 55,000.00**
**Beginning of Second Semester - 50,000.00**
**Beginning of third Semester - 50,000.00**

**Application Procedure:**

Relevant information and prescribed application form could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P.: 021 222 3608) in person or by post producing the receipt of the payment of Rs. 1000/- per application form, made to the University Account number (reference number)**(190032512101968)**at the People's Bank.

Those who wish to obtain application form and relevant information by post are requested to send a money order for Rs. 1000/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed stamped envelope** (23 x 10 c.m in size).

Application form and other details are also available in the Faculty web site - **www.grad.jfn.ac.lk**. Those who wish to send the downloaded application form should attach the money order for Rs. 1000/- drawn in favour of the **Bursar, University of Jaffna** or the receipt of the payment made to the University Account number (reference number)**(190032512101968)**at the People's Bank.

Duly completed applications should be sent to the **Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely** by registered post or handed over in person **on or before the closing date of application.** The programme applied for should be indicated as **"Application for Postgraduate Diploma in Teaching English as a second Language - 2021"** on the top left hand corner of the envelope.

**Incomplete, illegible or late applications will not be considered.**

**Guidance for the payment**

**For Local Payment**

Please pay at any branch of the People's Bank using **the usual deposit slip.**

Fill your personal information in the slip and **use reference number in place of account number.**

Take and keep a photocopy of the slip with you before providing it to the university.

**Reference Number**

| Degree | Reference No. | Amount | Reason for Payment |
|---|---|---|---|
| Postgraduate Diploma in Teaching English as a second Language 2021/23 (Batch III) | 190032512101968 | Rs 1000/- | Application form fee |

**For Foreign Payment**

If you send payment from a foreign country, please follow the instructions given below:

Following Information should be followed when making the payment.

Bank Name: **People's Bank, Sri Lanka**
Branch Code: **162**
Swift Code: **PSBKLKLX**
Bank Account Name: **University of Jaffna**
Bank Account Number: **162100310000891**
Reference No: **printed as above**

Registrar
29.11.2021.

(CR 36107 )1-6


தொற்று722...

அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 63 ஆயிரத்து 989 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 347 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 387 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை - இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 7 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 346 ஆக அதிகரித்துள்ளது.

(கு-22)



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் - 2022

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்ப் கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கமுடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2021 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில்வந்து பெறமுடியாத வர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் **விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2021 தொடக்கம் 31.12.2021 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்க-வேண்டும் கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பபடிவத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2022"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியினுள் இடவேண்டும். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாகசேவை உத்தி-யோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிபடுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021-3213024 / 021-3207785 / 0213213025 தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.

**செயலாளர் ந.மோகனரூபன்**
**அறங்காவலர் சபை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு**

<u>முதலாவது அட்டவணை - (படிவம் 01)</u>

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்**
**.......... ஆம் ஆண்டு**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :- ..........................................
02. பிறந்தநாள் :- ..........................................
03. இந்துசமயத்தவரா? :- ..........................................
04. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?:-..........
05. நீங்கள் உறுப்புரிமை 3(2)(ஏ) அல்லது 3(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவரா யின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விவரங்களைத் தருக.

| பற்றுச் சீட்டு வழங்கிய நாள் | பற்றுச் சீட்டு தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விவரம் |
|---|---|---|---|
| | | | |

06. இலங்கை முகவரி :- ....
07. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற்கட்டளையின் விபரம்:

**<u>காசுக்கட்டளை/த.க. இல</u>** **<u>அலுவலகமும் வழங்கிய நாளும்</u>** **<u>தொகை</u>**

...................... .................................................. ..............

08. நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப் பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
09. இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
10. இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு. வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராக பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..........................................
**விண்ணப்பதாரர் ஒப்பம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தை புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ............. ஆம் ஆண்டு .......... மாதம் ........... நாளன்று என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**

..........................................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு :-** விண்ணப்பத்தாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை **"(றபர் ஸ்ராம்ப்)"** இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 2021.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

<u>இரண்டாவது அட்டவணை - (படிவம் 02)</u>

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**
**.......... ஆம் ஆண்டு**

செயலாளர்
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

......ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்...... அஞ்சலகத்தால் ....... ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட ........ இலக்கங்கொண்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
எனக்குள்ள உபயம் :- ..........................................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :-..........................................

..........................................
**உறுப்பினர் ஒப்பம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம், எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ................ஆம் ஆண்டு ....... மாதம் .......நாளன்று .....என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதிசெய்கின்றேன்.

**என் முன்னிலையில்**

..........................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு :- விண்ணப்பத்தாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்ராம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2021.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(cr.5544) (2.6)

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -09 நடுத்தெரு ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல 31/10 என்னும் ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் சின்னையா கார்த்திகேசு என்னும் பெயரில் வரிமதிப்பீட்டு பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனம் அளவீடு செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த நிலப்பரப்பு 01 குளி 4 1/2 விஸ்தீரணம் கொண்ட ஆதனத்திற்கு கதிரவேலு சின்னத்தம்பி பிரசித்த நொத்தாரிசு க.தில்லையம்பலம் முகதாவில் 1952.12.28ம் திகதி 249ம் இலக்கத்தில் நிறைவேற்றிய பிரிவிடுதல் உறுதி மூலம் சொந்தமும் உரித்து டையவரானார். குறித்த கதிரவேலு சின்னத்தம்பி காலஞ்செல்ல மேற்குறித்த சின்னத்தம்பி நடராசாவும் சின்னத்தம்பி செல்லத்துரையும் உரித்துள்ள வாரிசுகளானார்கள்.

சின்னத்தம்பி நடராசாவும் செல்லத்துரை யசிதாவும் செ.றதீஸ்குமாரும் நன்கொடையாக பிரசித்த நொத்தாரிசு வி.உருத்திரேஸ்வரன் முகதாவில் 4049ம் இலக்க 09.06.2012ம் திகதியிட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை செல்லத்துரை கைம்பெண் சற்குணவதிக்கு வழங்கியுள்ளார்கள்.

குறித்த அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனம் எங்களில் 1ம் பேர்வழிக்காரர்களின் காலஞ்சென்ற பிதாவும் 2ம் 3ம் பேர்வழிக்காரர்களின் காலஞ்சென்ற பிதாவின் பிதாவுமாகிய கதிரவேலு சின்னத்தம் பியின் பேரில் மனமொத்து 1952ம் ஆண்டு மார்கழி மாதம் 28ம் திகதி பிரிவிடல் செய்யப்பட்ட பிரிவிடல் உறுதி இல 249 இன் படி நிலபர 1 குளி 4 1/2 யும் கிடைக்கப்பெற்றது என்றும் கதிரவேலு சின்னத்தம் பியின் சகோதரர்கள் தமக்கு வேறு ஆதனங்களை கதிரவேலு சின்னத்தம்பி நன்கொடையாய் கொடுத்த மையால் தமது சொரியல் பங்கையும் கதிரவேலு பொன்னம்பலம், கதிரவேலு சிவசம்பு கைம்பெண் பாறுபதியும் மனமொத்து தமது பங்கை கொடுத்தமையால் கதிரவேலு சின்னத்தம்பியே முழுப்பங் கையும் பூரணமாய் சுதந்திரமாய் எவரது தடையுமின்றி 50 வருடங்களுக்கு மேலாய் ஆட்சிசெய்து வந்தார் என்றும் இவர்களது பின்னுரித்தாளர்கள் இந் நன்கொடையை ஏற்று சாட்சிக்காரர்களாய் தமது ஒப்பத்தை வைக்கின்றனர் என்றும் அடியுறுதியில் இதைப்பற்றி மாட்டறையப்பட்டுள்ளது என்றும் அடியுறுதியும் கூடக் கொடுக்கிறோம் என்றும் வெளிப்படுத்தியுள்ளர்கள்.

செல்லத்துரை கைம்பெண் சற்குணவதி பிரசித்த நொத்தாரிசு ஆதித்தன் கார்த்திகா முகதாவில் 418ம் இலக்க 26.08.2014ம் திகதியிடப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை புவிராஜசிங்கம் வசந்தராஜாவுக்கும் வழங்கியுள்ளார். புவிராஜசிங்கம் வசந்தராஜாவும் விஜயகுமாரியும் பிரசித்த நொத்தாரிசு ச.சிவரூபன் முகதாவில் 5412ம் இலக்க 04.09.2016ம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை ஜேசுதாசன் றிச்சாட் றீகனும் மனைவி நளாயினிக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன இடாப்பு:-** வடமாகாணம் யாழ் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை இறை யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-09 நல்லூர் பிரதேச செயலர் பிரிவு கிராம அலுவலர் பகுதி J/95 "புங்கடி வளவு" நில பர 06 குளி 17 . அதில் நில அளவையாளர் ப.புஸ்பராஜா அவர்களால் அளந்து வரைந்த 3536ம் இலக்கப்படத்தில் துண்டு01 எனக் குறித்த படி நில பர 02 குளி 10.01. இது மீண்டும் நில அளவையாளர் பி.தனராஜ் அவர்களால் 2016.06.20 ம் திகதி 3644ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 1-4 எனக்காட்டப்பட்டபடி நில.பர 02 குளி 08.57 இதில் துண்டு 02 எனக் குறித்த ஆதனம் நிலப்பரப்பு 01 றகும் எல்லை .

**கிழக்கு** :- கனகசபாபதி பெண் குகணேஸ்வரியின் ஆதனம்.
**வடக்கு** :- குறித்த படத்தில் துண்டு 01 எனக் குறித்த ஆதனம்.
**மேற்கு** :- 10 அடி அகலப்பாதை.
**தெற்கு** :- குறித்த படத்தில் துண்டு 04 எனக் குறித்த இதன் மிகுதி ஆதனம் இதடங்கலும் அத்துடன் மேற்கு ஒழுங்கையில் பிரதான வீதிக்குச் செல்லும் பாதை பாவிப்புரித்தும்.


தற்போது ஜேசுதாசன் றிச்சாட்றீகன் நளாயினி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜேசுதாசன் றிச்சாட்றீகன் நளாயினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம்**
**மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை.**

(cr.5545) (2.6)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 • 01 • 1937



மறைவு 26 • 11 • 2016

## அமரர் கிட்டிணன் பொன்னையா

**திதி: கார்த்திகை தேய்பிறை துவாதசி**

ஆண்டு ஐந்தென்ன ஆயிரம் தான் ஆனாலும்
ஆறாது எங்கள் துயர் காயாது எங்கள் கண்ணீர்
நீங்கள் அணைந்திட்ட நாள் முதலாய்
இன்று வரை உங்கள் நினைவுகள் நிழலாடுகின்றன

உண்மைதானா இதுவென்று - எம்
உள்ளுணர்வு மறுக்கின்றது
அன்பு கொண்ட உம் வதனம் - என்றும்
எம்மோடு இருப்பது போல் உணர்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்

**கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி.**

**குடும்பத்தினர்**
**021 226 3482**

(cr.36101 (2.6)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

**கல்வியியல் முதுமாணி (Master of Education)**
**2021/22 (அணி XIV) யாழ்ப்பாணம்**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்: -**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமும், பட்டப்பின் கல்விடிப்ளோமாவும்"

அத்துடன்

- ஒருபாடசாலையில் அல்லது யாதேனும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கை நெறிக்குப் பொருத்தமான கல்வி சார் பணிகளில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவம்

**தெரிவுமுறைமை:-**

- எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
(எழுத்துத் தேர்வு கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்.)

**கற்கைக் காலம் :** ஒருவருடம்
**மொழி மூலம் :** தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம் :** 185,000/- (5000/- மீள அளிக்கப்படும்)
**விண்ணப்பப் படிவக் கட்டணம்:** 1,000/-
**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.12.2021**

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**

1. மக்கள்வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச்சீட்டில் (190152502101958) எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற்கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பபடிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப் பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகவிபரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக்கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக்கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு (190152502101958) செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 31.12.2021 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.


உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
**29.11.2021.**

(cr.36108) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
20 · 05 · 1953



இறப்பு
27 · 11 · 2021

## திரு. மாணிக்கம் இரட்ணவடிவேல்

இலங்கை யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், மெல்பேண் ஆஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. மாணிக்கம் இரட்ணவடிவேல் அவர்கள் கடந்த (27.11.2021) சனிக்கிழமை அன்று மெல்பேணில் அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. வீரகத்தி மாணிக்கம் திருமதி சிவக்கொழுந்து மாணிக்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி திருநாவுக்கரசு சற்குணம் தம்பதியரின் அன்பு மருமகனும், இரஞ்சினிதேவியின் அன்புக் கணவரும், ரஜீவன், ரஜீக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயக்குமாரின் அன்பு மாமனாரும், ஆரியன், அணிக்கா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற தேவராஜா, ராமலிங்கம் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி கந்தசாமி, காலஞ்சென்ற சிவனேஸ்வரி சிவலிங்கம், காலஞ்சென்ற தனலக்சுமி தனபாலசிங்கம் மற்றும் அரியநாயகம் (இலங்கை), பாலரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலாதேவி (இலங்கை), தவமலர் (கனடா), கந்தசாமி (இலங்கை), காலஞ்சென்ற சிவலிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் லீலாவதி (இலங்கை), விமலாதேவி (கனடா), ரதிரஞ்சனா (கனடா), விக்னேஸ்வரன் (கனடா), புவனேஸ்வரன் (இலங்கை), லோகநாதன் (கனடா), சத்தியமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**ரஜீவன் இரட்ணவடிவேல்** (மகன் - 0044 7948 250 663)
**ரஜீக்கா ஜெயக்குமார்** (மகள் - 0061 407 040 096)
**சர்மிளா சுதேசன்** (பேறாமகள் - 0061 421 974 227)
**கந்தசாமி** (மைத்துனர் - 076 547 1308)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs 41363) (2.6)

# திருமண நிகழ்வுகளுக்கு மண்டபங்களில் 200 பேர்

*புதிய சுகாதார வழிகாட்டி வெளியீடு*

கொழும்பு, டிசெ. 1

நாட்டில் இன்று முதலாம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை நடைமுறைக்குவரும் வகையில் புதிய சுகாதார வழிகாட்டல்களை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன வெளியிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதன்படி மண்டபங்களில் நடத்தப்படும் திருமண நிகழ்வுகளில் ஆகக்கூடியது 200 பேர் வரையிலும், வெளியிடங்களில் நடத்தப்படும் திருமண வைபவங்களில் ஆகக்கூடியது 250 பேர் வரையிலும் கலந்துக்கொள்ள முடியும் என்பது உள்ளிட்ட பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

(கு-இ)

# யாழ். கலாலயா பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே! மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- ***கேக் ஐசிங்*** – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- ***உணவு தயாரித்தல்*** – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS ***(முக அழகுக்கலை)*** Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- ***கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*** 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS ***(மணப்பெண் அலங்காரங்கள்)*** இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

மேலதிக விபரங்களை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**05.12.2021 ஞாயிறு காலை 10.00மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**06.12.2021 திங்கள் காலை 10.00 மணி**

(CS 36498) (3/6)

-இயக்குநர்-

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2022 ஆம் ஆண்டிற்கான 2வது மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொதுச்சந்தைகள், இறைச்சிக் கடைகள், பொதுமலசலகூடங்கள் என்பனவற்றை 2022.01.01ஆம் திகதி தொடக்கம் 2022.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - | 01.12.2021 – 07.12.2021 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - | 08.12.2021 பி.ப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - | 08.12..2021 பி.ப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - | வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமையலுவலகம். |

| தொ இ | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,885,500.00 | |
| 2 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 38,206.00 | 250.00 |
| 3 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 179,300.00 | 250.00 |
| 4 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 67,100.00 | |
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 26,681,050.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்(மின்கட்டணம் குத்தகைக்கு எடுப்பவர்களால் செலுத்தப்படல் வேண்டும்) | 750.00 | 7,500.00 | 50,043.00 | |
| 3 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 209,000.00 | 250.00 |
| 4 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 70,126.00 | |
| 5 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 55,000.00 | |
| | ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 170,500.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7500.00 | 40,500.00 | 250.00 |

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2021.10.07 ஆம் திகதிய வலம்புரி, உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பார்வையிடலாம்.

**க.தர்சுஷன்**
**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(cr.36109) (2.6)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2022

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், என்பவற்றிற்கு **2022.01.01** ஆம் திகதி தொடக்கம் **2022.12.31** ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2021.12.01 - 2021.12.08 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2021.12.08 பி.ப 2.00 மணி வரை
கேள்விதிறக்கும் திகதி :- 2021.12.08 பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை **தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப் பத்திரம் / பத்திரங்கள் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **அடையாள அட்டை**யையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் **வதிவிடச் சான்றிதழையும்** சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சங்கானை மரக்கறிச் சந்தைக்கு விண்ணப்பப் பத்திரம் பெற்றுக்கொள்ள விரும்புவோர் (கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள்) ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் 2021 டிசம்பர் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பிருந்து கேள்விப்பத்திரம் பெறும் போது ரூபா 200,000.00 க்கு குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரமாக வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி / வைப்புச் சான்றிதழ், தானியங்கி இய்ந்திர அட்டை இருந்தால் அதனையும் சமர்ப்பித்தல் வேண்டும். தானியங்கி இயந்திரம் அட்டை இல்லையாயின் வங்கி முகாமையாளரால் உறுதிப்படுத்த வேண்டும். சித்தியடையாத கேள்விதாரரது வைப்புச் சான்றிதழ் கேள்விதிறந்த மறுநாள் மீளளிக்கப்படும். சித்தியடைந்த கேள்விதாரரது வங்கி சேமிப்புப் புத்தகம் / வங்கிப் பிணைமுறி/ வைப்புச் சான்றிதழ், தானியங்கி இயந்திர அட்டை என்பன கேள்வித் தொகையின் $^1/_3$ பகுதியை அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் மீளளிக்கப்படும்.
3. சங்கானை மரக்கறி, சந்தைக்கான மின்சாரக் கட்டணம் குத்தகைக்காலப்பகுதியில் குத்தகையாளரால் செலுத்தப்படல் வேண்டும்.
4. சங்கானை மரக்கறிச்சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகள் துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் குத்தகைக்கு வழங்கப்படும்
5. சங்கானை நவீன மீன் சந்தையில் கோழி இறைச்சிக்கடைக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளதால் இச்சந்தை வளாகத்திற்குள் கோழி விற்பனை, கோழி உரித்தல் என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் மீன் சந்தையின் மீன் வெட்டும் இடத்தினது தூய்மைக்குப் பொறுப்பாக இருப்பதுடன் பொதுசுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைய பராமரிப்பதுடன் தொடர்ந்து இதனைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். மீன் வெட்டுபவர்களிடம் பணம் அறவிடலாம்.
7. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
8. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும், போதிய காரணங்களால் எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் $^1/_3$ பகுதியை 2021.12.15ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்ள வேண்டும்.
11. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.
12. ஒப்பந்தகாரர் குத்தகை ஏற்கும் போது உள்ள கட்டடத்தின் தரம், கட்டட அமைப்புக்கள் யாவும் உரியமுறையில் பேணப்பட்டு குத்தகைக் காலம் பூர்த்தியடையும் போது மீண்டும் அதே நிலையில் கையளித்தல் வேண்டும்.
13. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இடல் வேண்டும்
14. சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபார நோக்கத்திற்காக கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% உம், மீன் கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம், வியாபார நோக்கத்திற்கு வரும் லொறிக்கு ரூபா 30.00 உம், வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் (மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) ஊடு ஒன்றிற்கு(5'X 3') ரூபா 50.00 உம் ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 5.00, உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் அறவிடக்கூடாது.
15. வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் "ஈருருளிப் பாதுகாப்புக் கட்டணம்" அல்லது "உந்துருளிப் பாதுகாப்புக் கட்டணம்" என்ற சிட்டையைக் கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிடமுடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிடமுடியாது.
16. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டத்தில் மீன், மரக்கறி, கோழி இறைச்சி என்பன விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
17. காலத்திற்கு காலம் அரசாங்க சுற்றறிக்கைகள் மூலம் அறவிடுமாறு அறிவிக்கப்படும் வரிகள் வாடகைத் தொகை மீள் மதிப்பீடு செய்யப்படின் அத்தொகையும் அறவிடப்படும்.
18. 2015.11.09 ஆம் திகதிய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.
19. மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**சந்தைகள், கோழியிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2022**

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்), இறைச்சிக் கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சங்கானை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கானை மரக்கறிச்சந்தை (வாகனப் பாதுகாப்பு நிலையம் தவிர்த்து) | ___ | 8,574,225.00 | 15,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 229,900.00 | 3,000.00 | 500.00 |
| 03 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 190,190.00 | 3,000.00 | 500.00 |
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சத்தியகாடு சந்தை | ___ | 1,321,925.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | தொல்புரம் மத்திய சந்தை | ___ | 27,835.00 | 500.00 | 250.00 |
| 03 | பொன்னாலை வாராந்தச் சந்தை | ___ | 43,210.75.00 | 500.00 | 250.00 |
| | **வட்டுக்கோட்டை உப அலுவலகம்** | | | | |
| 01 | சங்கரத்தை சந்தை | ___ | 166,259.50 | 3,000.00 | 750.00 |
| 02 | வட்டுக்கோட்டை பொதுச்சந்தை | ___ | 20,900.00 | 1,000.00 | 500.00 |
| 03 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 145,255.00 | 1,000.00 | 500.00 |
| 04 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1,750.00 | 147,450.45 | 1,000.00 | 500.00 |
| | **அராலி உப அலுவலகம்** | | | | |
| 01 | அராலி, செட்டியார்மடம் சந்தை | ___ | 24,035.00 | 500.00 | 250.00 |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
2021.12.01

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2022

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பல்லசுட்டி சந்தை 2022.01.01 ஆம் திகதி தொடக் கம் 2022.12.31 ஆம் திகதி வரையான கால்ப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | சந்தைகள் (வாகனப் பாதுகாப்பு நிலையத்துடன்) | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | **சுழிபுரம் உப அலுவலகம்** | | | | |
| 01 | பல்லசுட்டி சந்தை | - | 32,450.00 | 1000.00 | 250.00 |

பல்லசுட்டி சந்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் அதனை நடாத்துவதற்குரிய இடத்தினை தற்போது சந்தை இயங்கும் இடத்திலிருந்து 500m சுற்றுவட்டத்தினுள் தாமே தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் தெரிவு செய்த இடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகரின் சிபார்சுக்கு அமைவாகவே செயற்படவேண்டும். அத்துடன் தெரிவு செய்யும் இடத்திற்கான குத்தகை அல்லது வாடகை குத்தகையாளராலேயே கொடுக்கப்படவேண்டும்.
கேள்விப்படிவம் வழங்குதல், ஏற்றுக்கொள்ளுதல், திறக்கும் திகதி மற்றும் ஏனைய நிபந்தனைகள் மேற்கூறப்பட்ட மீள் கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவையே இதற்கும் பொருந்தும்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
2021.12.01

தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(CR 36103) 1-6

**வேலையாள்கள் தேவை**

கோண்டாவிலில் அமைந்துள்ள
**மிக்ஷர்** தொழிற்சாலைக்கு
Packing இற்கு **பெண்**
வேலையாள்கள் தேவை.
முன் அனுபவமுள்ள Sales Rep தேவை.

**077 920 9507**



## நாவலர் மண்டப புனரமைப்பு: அதிகாரிகளுடன் கலந்தாய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 1
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு, நாவலர் கலாசார மண்டபத்தைப் புனரமைத்தல் தொடர்பில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் யாழ். மாநகர சபையின் அதிகாரிகளுக்கு இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
இந்து சமய, கலாசார அலுவவல்கள் திணைக்களத்துக்குச் சொந்தமான நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் பணிகளை யாழ். மாநகர சபையோடு இணைந்து செயற்படுத்தும் வகையில் சுமுகமான முறையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
இதன்போது இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனால், நாவலர் கலாசார மண்டபம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள், யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணனிடம் கையளிக்கப்பட்டன. (ஒ-4-27)

## கோதுமை மா விலை அதிகரிப்பு: தோட்ட மக்கள் பாதிப்பு

நுவரெலியா,டிசெ.1
கோதுமை மாவின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதால், பெருந்தோட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஒரு தொழிலாளியின் வீட்டில் ஒரு நாளைக்கு 3 அல்லது 5 கிலோ வரை கோதுமை மா தேவைப்படுகின்றது.
தற்போதைய விலை அதிகரிப்பால் தோட்டத்தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.
குறைந்த சம்பளம் பெறும் இவர்கள் தற்போது அதிகரிக்கப்பட்ட மாவின் விலை காரணமாக மேலும் மேலும் பொருளாதாரச் சுமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
பொருள்களின் விலை அதிகரிப்புக்கு ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
எனவே தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரம் கருதி, கோதுமை மாவை மானிய விலையில் வழங்குவதற்கும், நிவாரணம் வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4)

### மனித உரிமை...

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சியோபெய்ன் மெக்டொனாக், கெரெத் தோமஸ், ஸ்டீவ் பேக்கர் ஆகியோர் மாவீரர்நாளையொட்டி வெளியிட்டுள்ள காணொலியில் இந்தத் தகவலைக் குறிப்பிட்டுள்ளனர். இதுபற்றி அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

**சியோபெய்ன் மெக்டொனாக்**

இலங்கையில் இடம்பெற்ற சர்வதேச சட்டங்களுக்கு முரணான குற்றங்கள் தொடர்பில் தற்போதுவரை எந்தவொரு நபரும் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவில்லை. இலங்கைத் தமிழ் சமூகத்துக்கு எதிராக அரசால் இழைக்கப்பட்ட படுகொலைகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் நீதியை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் தற்போது சர்வதேசத்தை நோக்கி நகரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதற்கான மிகச்சிறந்த வாய்ப்பை அண்மைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடர் வழங்கியிருக்கின்றது. நல்லிணக்கத்துக்கான பாதையைக் கடப்பதற்கு எந்தளவு தூரம் இருந்தாலும், இலங்கைத் தமிழ் மக்களுக்கான நீதி மற்றும் மனித உரிமைகள் என்பன உறுதிசெய்யப்படும் வரையில் நாம் அதற்காகத் தொடர்ந்து போராடுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

**கெரெத் தோமஸ்**

மாவீரர்நாள் என்பது 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின் பல்வேறு கசப்பான சம்பவங்களை நினைவுபடுத்துகின்றது. இருப்பினும், நீண்டகாலப்போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னரும் இலங்கைவாழ் தமிழ் மக்கள் தொடர்பான நகர்வுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் வழக்கமானவையாக மாறிவிட்டன. குறிப்பாக 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட மிகமோசமான சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் தற்போதும் தொடர்கின்றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

**ஸ்டீவ் பேக்கர்**

இலங்கையில் இடம்பெற்ற அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் முகங்கொடுத்த அனைத்துத் தமிழர்களையும் நினைவுகூருகின்றோம். போரின்போது ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலருக்கு என்ன நேர்ந்தது என்பதே தெரியாமல் போயிருக்கின்றது. போரில் உயிரிழந்தவர்களை எவ்வித தடைகளுமின்றி நினைவுகூருவதென்பது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் அது அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சாத்தியப்படாமை பெரிதும் விசனமளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார். (த-இ)

### 4ஆவது சடலம்...

துங்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கு, மணற்காடு, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் அண்மையில் சடலங்கள் கரையொதுங்கியிருந்த நிலையில், கட்டைக்காடு பகுதியிலும் சடலம் ஒதுங்கியுள்ளது. இதன்படி, மாவட்டத்தில் ஒரு வாரத்தில் கரையொதுங்கிய நான்காவது சடலம் இது என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-20)

### போராட்டம்...

ரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினரின் இத்தகைய அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மாதகல் குசுமாந்துறைப்பகுதியில் நேற்றுமுற்பகல் ஒரு பரப்பு காணியை கடற்படையின் முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்க முற்பட்ட நிலையில் அது பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்தநிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் திரும்பிச் செல்லாது மீண்டும் அளவிட வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், மக்கள் கடற்படை முகாம் முன்பாக அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தநிலையில் குறித்த பிரதேசத்துக்கு வருகை தந்த இளவாலை குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி, நில அளவை இடம்பெறாது என்றும் கடற்படையினர் அச்சுறுத்தினால் தெரியப்படுத்துங்கள் என்றும் கூறிச்சென்றிருந்தார். இந்த நிலையில், மாலை வேளை மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த-125)

*(தொடர்புடைய செய்தி 2ஆம் பக்கம்)*

### பொறுப்புக்கூரல்...

னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்புக்குச் செல்லும் வீதியில் முள்ளிவாய்க்கால் பெயர்பலகையை ஒளிப்படம் எடுத்த ஊடகவியலாளர் ஒருவர் மீது இலங்கை இராணுவத்தினரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் கண்துடைப்புக்காக மூன்று இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தமிழர்கள் மீது கடந்த காலங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் இனவழிப்புக் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறல் இல்லாத காரணத்தாலேயே தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தக் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணைகளை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். அதே போன்று நடந்த சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்துகின்றோம் - என்றார். (ம)

### நேற்றும்...

மணியளவில், சமையலில் ஈடுபட்டிருந்தபோது, திடீரென்று அது வெடித்து பெரும் சுவாலையுடன் அது தீப்பற்றி எரியத்தொடங்கியுள்ளது. பின்னர் அது அணைக்கப்பட்டது. எவருக்கும் காயமேற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சில நாள்களுக்கு முன்னர் சுன்னாகம் பகுதியிலும் சிலிண்டர் வெடித்திருந்தது. இதேவேளை, நேற்றுமுன்தினம்வரை 11 சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், கொட்டகலை - பத்தனை தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியின் வீட்டில் சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த ரெகுலேட்டர் நேற்று வெடித்து எரிந்துள்ளது. அதன் துண்டு களையேனும் காண முடியவில்லை. அதற்கான இறப்பர் குழாயும் முழுமையாக எரிந்துள்ளது. சிலிண் டர் வீட்டுக்கு வெளியே வீசப்பட்டதால், வீட்டுக்குள் நிகழவிருந்த பெரும் இடர் தவிர்க்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி, சிலாபம், நைனாமடம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வாயு சமநிலை தொழிற்சாலையில் நேற்று இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் இருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவரின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.

குறித்த தொழிற்சாலையில், வாயு சமநிலை நடவடிக்கைகளுக்காக 5 அடி உயரமுடைய நைட்ரிஜன் அடங்கிய வாயு சிலிண்டர் பயன்படுத்தப்பட்டிருந்ததாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

**விசாரணை அறிக்கை இன்று வெளியாகும்**

இதேவேளை, நாடு முழுவதும் பதிவாகியுள்ள எரிவாயு வெடிப்புக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுக்கள் உண்மை நிலைமையைப் பெரும்பாலும் இன்று வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். (த-இ)

### 29 பேருக்கு...

கப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று, வவுனியா மாவட்ட பாலியல்நோய் மற்றும் எய்ட்ஸ் தடுப்புவேலைத்திட்டத்தின் பொறுப்பு மருத்துவ அதிகாரி கு. சந்திரகுமார் தெரிவித்தார்.

எய்ட்ஸ் நோய் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்தபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலக எய்ட்ஸ் தினம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியாகும். இந்தமுறை சமத்துவமின்மையை ஒழிப்போம், எய்ட்ஸை ஒழிப்போம், பெருந்தொற்றை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் உலக எய்ட்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இலங்கையில் இதுவரை 4 ஆயிரத்து 142 பேர் எய்ட்ஸ் நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

எந்தவித தொற்று அறிகுறிகளுமின்றி நோய்தொற்றுடன் 3ஆயிரத்து 700 பேர் நடமாடி வருகின்றனர். வவுனியா மாவட்டத்தில் 2003 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டின் காலாண்டுவரை 29 எய்ட்ஸ் நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளனர்.

நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதியில் ஒரு நோயாளி மாத்திரம் இனம்காணப்பட்டுள்ளார். 29 நோயாளர்களில் 16 பேர் ஆண்கள். அவர்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். வெளிநாடு சென்று விபசாரத்தில் ஈடுபட்ட ஒருவர் இந்தவருடம் வவுனியாவில் உயிரிழந்துள்ளார்.

ஏனைய நோயாளர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருகின்றன. அந்த மருந்துகளின் மூலம் ஒருவரது உயிரிழப்பையாவது தாமதப்படுத்தமுடியும்.

எய்ட்ஸ் நோய் பரவுவதற்கான மூன்று காரணங்களில் எச்.ஐ.வி. தொற்றுள்ள ஒருவருடன் பாலியல் ரீதியாகத் தொடர்பு கொள்ளல், நோய்தொற்றுள்ள ஒருவரின் குருதியை இன்னுமொருவருக்கு செலுத்துதல் மற்றும் ஒருபால் உறவு, தொற்றுள்ள தாய் ஒருவருக்கு பிறக்கின்ற பிள்ளை மூலமாக இந்த நோய் பரவுகிறது. இலங்கையில் தற்போது குருதி மாற்றங்களின்போது உரிய பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்துடன் கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்களது இணக்கத்துடன் எச்.ஐ.வி. பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. வவுனியாவை பொறுத்தவரை 15 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவர்களே தொற்றாளர்களாக உள்ளனர். நோய்தொற்று ஏற்படுவதற்கு பிரதான காரணமாக விபசாரம் காணப்படுகின்றது.

அத்துடன் 10 க்கு மேற்பட்டோர் நோய்த் தொற்றுடன் சமூகத்தில் நடமாடி வரும் நிலை காணப்படுகின்றது. வேறுமாவட்டங்களிலிருந்தும் விபசார தொழிலாளர்கள் இங்கு வருகை தருகின்றனர். எனவே எய்ட்ஸ் நோய் தொடர்பாக இளைஞர்கள், இராணுவத்தினர், பொலிஸார், மாணவர்கள் ஆகியோருக்கு பல்வேறு தெளிவுபடுத்தல்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

எச்.ஐ.வி. வைரஸ் ஒருவருக்கு தொற்றினால் அது எய்ட்ஸ் நோயாக மாறுவதற்கு 8 தொடக்கம் 10 வருடங்கள் ஆகும். நோய்த்தொற்று ஏற்பட்டவர் சாதாரண ஒரு மனிதரை போலவே இருப்பார். அவரது முகத்தை வைத்து நோயை கண்டுபிடிக்க இயலாது. குருதியை பரிசோதனை செய்வதன் மூலம் மாத்திரமே அதனை கண்டுபிடிக்கமுடியும். ஒரு தரமாவது பரிசோதனையை மேற்கொண்டால் குறித்த நோய் மற்றவர்களுக்கு தொற்றாமல் தடுக்கலாம்.

வவுனியா மருத்துவமனையில் அமைந்துள்ள பாலியல்நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவில் பொதுமக்கள் தாமாக வந்து பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். இங்கு பரிசோதனைகள் மேற்கொள்பவர்களது இரகசியங்கள் பாதுகாக்கப்படும். அத்துடன் சுயமாக வீட்டிலிருந்து பரிசோதனை செய்யும் முறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன- என்றார். (த-110)

### இதுதானா....

பட்ட இனப்படுகொலையை மறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சித்தா லும், போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதை சர்வதேச சமூகம் மறக்காது.

இவ்வாறு தெரிவித்துள்ளார், கனடாவின் ப்ரம்ப்ரன் நகர மேயர் பட்ரிக் பிரவுன்.

மாவீரர் நாளான கடந்த சனிக்கிழமையன்று நினைவேந்தலைச் செய்வதற்காக சுமார் 60 பேர் ஊர்காவற்றுறை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் செல்வதற்கு முற்பட்டபோது, துப்பாக்கிகளைத் தாங்கிய படையினரால் தடுத்துநிறுத்தப்பட்டனர். அதனையடுத்து அந்த இடத்திலேயே அமர்ந்த அவர்கள், பின்னர் படையினரின் தடைகளை உடைத்துக் கொண்டு துயிலுமில்லத்துக்குச் சென்று ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்தநிலையில், குறித்த ஒளிப்படத்தை மேற்கோள்காட்டி அதற்குக் கண்டனம் வெளியிடும் வகையில் தனது உத்தியோகபூர்வ 'ருவிற்றர்' பக்கத்திலேயே இது பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, 'பேஸ்புக் மற்றும் ருவிற்றர்' வலைத்தளங்களில் குறித்த ஒளிப்படத்தைப் பகிர்ந்து, 'இலங்கை அரசாங்கம் கூறுகின்ற நல்லிணக்கம் இதுதானா?' என்று கேள்வியெழுப்பியிருக்கும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இது குறித்துக் கடுமையான கண்டனத்தையும் வெளியிப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக் கது. (த-இ)

*கொரோனா பரவல் காரணமாக*

# எய்ட்ஸுக்கு சிகிச்சை பெறுவதில் நோயாளர்கள் பின்னடிக்கின்றனர்!

கொழும்பு, டிசெ. 1



**கொரோனா பரவல் காரணமாக, எய்ட்ஸுக்குச் சிகிச்சை பெறுவதில் நோயாளர்கள் பின்னடிக்கின்றனர் என்று - பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இது தொடர்பில் அந்தத் திட்டத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் ரசாஞ் ஜலி ஹெட்டியாராச்சி மேலும் தெரிவிக்கையில்; பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் வேலைத்திட்டத்தின் தரவுகளுக்கமைய, நாட்டில் தொற்றுக்கு உள்ளான வர்கள் 3 ஆயிரத்து 700 பேர் உள்ளனர். எனினும், அவர்களில் 2 ஆயிரத்து 600 பேர் மாத்திரமே சிகிச்சை பெற்றுவந்தனர். எனினும் கொரோனாப் பரவல் காரணமாக அந்த எண்ணிக்கை 363ஆக குறைவடைந்துள்ளது. அதற்குத் தீர்வாக சுய பரிசோதனைக் கருவிகளை இலவசமாக வழங்குவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது - என்றார். (ம)

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு பைஸர் ஏற்றல் ஆரம்பம்

சாவகச்சேரி, டிசெ.1




தென்மராட்சியில் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு 3 ஆவது டோஸாக பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம், நாவற்குழி மற்றும் கைதடி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கைதடி மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அத்துடன், இன்றையதினம் சாவகச்சேரி மற்றும் மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திலும் நாளை வியாழக்கிழமை வரணி மற்றும் மந்துவில் பொதுச் சுகாதார பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு வரணி மருத்துவ மனையிலும் 4 ஆம் திகதி தடுப்பூசி ஏற்றாமல் தவறவிட்டோருக்கு சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும் - என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-9)

## இந்தியாவிடமும் கடன் கேட்க செல்கிறார் அமைச்சர் பஸில்

கொழும்பு, டிசெ.1

கடன் அடிப்படையில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஸ இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் அண்மையில் உறுதிப்படுத்தியிருந்த நிலையில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்த மாதம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்தப் பயணத்தில் நிதி அமைச்சர், இந்தியப் பிரதமர் உட்பட அந்த நாட்டு அரசின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்த எதிர்பார்த்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்புக்களில் இந்திய முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளையும் நிதி அமைச்சர் முன்னெடுப்பார் - எனக் கூறப்படுகின்றது. (எ-இ)

*கிழக்கு தொல்பொருள்கள் விவகாரம்*

## ஜனாதிபதி செயலணிக்கு புதிய உறுப்பினர் மூவர்!

கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமைகளை முகாமை செய்வதற்கான ஜனாதிபதி செயலணிக்கு புதிய உறுப்பினர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான வர்த்தமானியும் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தரவினால் வெளியிடப்பட்டுள்ளது.

நில அளவையாளர் ஆரியரத்ன திஸாநாயக்க, ஓய்வுபெற்ற மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், விரிவுரையாளர் முபிசால் அபூபக்கர் ஆகியோர் இந்த ஜனாதிபதி செயலணியின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளர். (ம)

## சொற்பொழிவு

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும். சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் க.கைலவாசன், "ஆறுமுகமான பொருள் " என்னும் விடயப் பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஒ-ரி1)

English Medium Maths Group Class
Gr. 6 to O/L & A/L
இடம்: Brown Road
ஆசிரியர்: Mathy (B.Sc)
ஆரம்பம்: 01.12.2021 4.00 p.m
தொடர்பு: 076 132 5353 (cs 41366) (2.6)

வாடகைக்கு
இல.41 கோவில் வீதியில் நான்கு கடைகள் கொண்ட கடைத் தொகுதியில் ஒரு கடை வாடகைக்கு உண்டு. (CS 720) 1-6
தொடர்பு: 076 204 0941

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 இல் பிறந்த லண்டனில் வசிக்கும் Pr உள்ள, 7 இல் சூரியன் செவ்வாய் புதன், கி.பா 26 1/4, பரணி நட்சத்திரம் உடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (cs 41365) (2.6)
077 119 2289, 077 952 9586

# நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதானமான காரணங்கள் எவை?

*அனுர பிரியதர்ஷன எம்.பி. விளக்கம்*

கொழும்பு, டிசெ. 1


மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்மூலம் எதிர்கொள்ள நேர்ந்துள்ள நஷ்டமே நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாகும். இந்த நிலையில் இருந்து வெளியில்வர வெளிநாட்டு முதலீட்டாளர்களே தேவை என ஆளும் கட்சி உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிக விலைக்கு எரிபொருளைக் கொண்டுவந்து, நிவாரண விலைக்கு மக்களுக்கு விநியோகித்து வருகின்றது. அதேபோன்று, மின் உற்பத்திக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறைந்த விலைக்கே உராய்வு எண்ணெய் வழங்கி வருகின்றது. அதனாலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நட்டம் ஏற்படுகின்றது. மேலும் மின்சாரசபை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து, குறைந்த விலைக்கு பெற்றோலைப் பெற்றுக்கொண்டாலும் அதனையும் விட குறைந்த விலைக்கே மக்களுக்கு மின்சாரத்தை விநியோகித்து வருகின்றது. அதனால் மின்சார சபையும் நஷ்டத்திலேயே செல்கின்றது. இந்த நிலையில் இருந்து இந்த இரண்டு நிறுவனங்களையும் நாங்கள் மீட்கவேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் இதனை விடவும் பெரும் பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். இந்த இரண்டு நிறுவனங்களின் நஷ்டமே எமது பொருளாதாரத்துக்கு பிரச்சினை யாக ஏற்பட்டிருக்கின்றது. அந்த வகையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் மின்சார சபையும் நஷ்டத்தில் இயங்கும் இரண்டுமுக்கியநிறுவனங்களாகவே தொடர்ச்சியாக உள்ளன - என்றார். (ம)

வேலையாள்கள் தேவை
சூப்பர் மார்கெட் வேலைக்கு ஆள்கள் தேவை.
•காசாளர் •பண்டகசாலை காப்பாளர் •கணக்காளர் •பொதிசெய்பவர்
ஆகியோர் தேவை. வயது எல்லை 18 - 40 ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் 15000/= தொடக்கம் 40000/= வரை.
இடம் : திருநெல்வேலி, நல்லூர்.
முகவரி : 195, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
தொ.பே. : 077 028 2811, 076 022 5001
மின்னஞ்சல் : mkpdiscounts@gmail.com (cs.41346) (2.6)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
➢ யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
➢ அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
➢ தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
➢ French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.